Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

# தினமுரசு

தினப்பதிப்பு

THINAMURASU

முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2042 வைகாசி 15 ஞாயிற்றுக்கிழமை (29.05.2011) பக்கங்கள் 16 ஓசை – 242

யாழ் நகரில் ஒரு வான்வழி நிலையம்

(C/706)

SPICE TRAVELS & TOURS (PVT) LTD®

IATA



412, First Floor, Hospital Road, Jaffna.
(Adjoining Sangeetha Mobile Links)

Fly Line
Keethan - 0773 916 416
Tharshy - 0773 915 530



அரியாலையில் குடைசாய்ந்த காஸ் சிலிண்டர் வாகனம்

02



நனோ கார் நேற்று கொழும்பு வந்தது

15



சோனியா தயாநிதி சந்திப்பு புதுத்திருப்பம்

08

இரண்டாவது தடவையும் ஐ.பி.எல் கிண்ணம் சென்னைக்கு

07

# தீர்வு தொடர்பாக அரசின் நிலை என்ன? நாளை கூடுகிறது சு.கட்சி செயற்குழு



(கொழும்பு)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மற்றும் தமிழ்க்கட்சிகளுடன் அரசாங்கம் தற்போது நடத்திவருகின்ற பேச்சுவார்த்தை தொடர்பாகவும், இனப்பிரச்சினை தீர்வு தொடர்பான இந்தியாவின் நிலைப்பாடு பற்றியும் நாளை நடைபெறவிருக்கும் சுதந்திரக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் ஆராயப்படவிருப்பதாகத் தெரியவருகின்றது.

நாட்டின் அரசியல் நிலவரம் குறித்து ஆராய்வதற்காக ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரதான கட்சியாகிய சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் நாளை அலரி மாளிகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமையில் நடைபெறவிருக்கின்றது.

இக்கூட்டத்தில் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக அரசாங்கம் தற்போது நடத்திவருகின்ற பேச்சுவார்த்தையின் விபரங்களையும், இந்தியாவின் நிலைப்பாடு பற்றியும், அரசாங்கம் மேற்கொள்ளவேண்டிய தீர்மானங்கள் பற்றியும் செயற்குழுவின் கருத்தை அறிந்துகொள்வதற்கான விளக்கங்களை ஜனாதிபதி அளிப்பார் என சுதந்திரக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

வழமையாக நடைபெறும் மத்திய செயற்குழுவின் கூட்டம் என்று இது கருதப்பட்டாலும், தற்போதைய அரசியல் சூழ்நிலையில் ஐ.நா.நிபுணர் குழு அறிக்கை, ஐ.நா.மனித உரிமை ஆணைக்குழுவின் அமர்வினை எதிர்கொள்ளல் மற்றும் இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக இந்தியாவின் பிந்திய நிலைப்பாடு ஆகியவற்றின் பின்னணியில் மிகவும் முக்கியமான கலந்துரையாடல்கள் இக்கூட்டத்தில் இடம்பெறும் எனத் தெரியவருகின்றது.

## கே.பி.யின் கருத்திற்கு பதில் தராது இந்தியா

(கொழும்பு)

ராஜீவ் காந்தியின் படுகொலைச சம்பவத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் தொடர்பிருப்பதாக ஏற்றுக்கொண்டு குமரன் பத்மநாதன் அண்மையில் அளித்திருந்த பேட்டி குறித்து தற்போதைக்கு கருத்துக்கள் எதனையும் வெளியிடுவதில்லை என்று இந்தியா அறிவித்துள்ளது.

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் படுகொலைச் சம்பவம் குறித்து இந்திய ஊடகங்களுக்கு விடுதலைப் புலிகளின் முன்னாள் சர்வதேச விவகாரப் பொறுபபாளர் குமரன் பத்மநாதனின் தெரிவித்திருந்த கருத்து தொடர்பில் இந்தியா தொடர்ந்தும் மௌனம் சாதிப்பது அவதானிகளை ஆச்சரியப்பட வைத்துள்ளது.

ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்ட சம்பவத்திற்கும் விடுதலைப புலிகளுக்கும் நேரடித் தொடர்பிருந்ததாக குமரன் பத்மநாதன் இந்திய ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிட்டிருந்தார்.

## மன்னாரில் ஆராய்ச்சி ஆரம்பம்

(கொழும்பு)

மன்னார் மாவட்டத்தில் எண்ணெய் வள ஆராய்ச்சிகான பணிகளை எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் ஆரம்பிக்க இந்திய ஆராய்ச்சி நிறுவனம் தீர்மானித்துள்ளது.

ஏற்கனவே இதன் ஒரு கட்டம் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளதாகக் குறித்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் எண்ணெய் வளம் மிக்கதான 10 இடங்கள் அடையாளம் காணப்பட்டு, அவற்றில் ஒன்றைத் துளையிட்டு ஆராய்ச்சி செய்யும் நடவடிக்கைகள் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் முன்னெடுக்கப்படும் என அந்நிறுனம் தெரிவித்துள்ளது.

## மக்கள் சேவையில் மகத்தான பங்களிப்பு சந்திரகுமார் எம்.பி.க்கு ஆளுநர் பாராட்டு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் அபிவிருத்தியில் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் அவர்களும் அவரது கட்சியாகிய ஈ.பி.டி.பி.யினதும் அர்ப்பணிப்பு மிக்கதான செயற்பாடு பாராட்டத்தக்கது என வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

நேற்று மாலை கிளிநொச்சியிலிருந்து வட்டக்க்ச்சி ஊடாக இராமநாதபுரம் செல்லும் பிரதான வீதிப் புனரமைப்பின் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் இந்த மாவட்டத்தினது அபிவிருத்தி யிலும் மாவட்ட மக்களினது வாழ்வாதார

(15ஆம் பக்கம்)

## யாழ்ப்பாணத்தில் அமைச்சர் பசில்

(யாழ்ப்பாணம்)

தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுப் புனர்வாழ்வு வழங்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்ட புலி உறுப்பினர்களுக்கு சுயதொழில் முயற்சிக்கடன் வழங்கப்படவிருக்கிறது.

புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட புலிகளின் முன்னாள் உறுப்பினர்களுக்கு முதன் முறையாக கடனுதவி வழங்கும் நிகழ்வு நாளை ஞாயிற்றுக் கிழமை முற்பகல்

(15ஆம் பக்கம்)

## கோயில்குளத்தில் ஆயுதங்கள் மீட்பு

(கொழும்பு)

வீட்டு வளவில் புதைத்து வைக்கப்பட்டிருந்த நான்கு ரி-56 துப்பாக்கிகளை இராணுவத்தினர் நேற்றுப் பகல வவுனியா கோவில்குளத்தில் கண்டுபிடித்துள்ளனர்.

கிடைத்த தகவலின்பேரில் தேடுதல் நடத்தியபோது பெரிய பிளாஸ்டிக் கொள்கலனில் கிறிஸ் பூசப்பட்ட நிலையில் துப்பாக்கிகள் புதைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. விசாரணைகள் நடைபெற்று வருகின்றது

## நெடியவன் பிணையில் விடுதலை

(கொழும்பு)

கைது செய்யப்பட்டுள்ள புலிகள் இயக்கத்தின் பிரமுகர் நெடியவன் நிபந்தனையுடன் பிணை அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பேரின்பநாயகம் சிவபரன் என்ற இயற்பெயரைக் கொண்ட நெடியவன் (வயது 35) அண்மையில் நோர்வேயில் கைதுசெய்யப்பட்டார்.

நோர்வே காவல்துறையினர் கடந்த வாரம் நெடியவனைக் கைது செய்து ஒஸ்லோ நீதிமன்றில் ஆஜர் செய்தனர். நெதர்லாந்து அரசாங்கத்தின் கோரிக்கைக்கு அமைவாக நெடியவன் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப் படுகிறது.

ஒரு நீதவான் உள்ளிட்ட ஐந்து நெதர்லாந்துப் பிரதிநிதிகள் இரண்டு நாட்கள் நெடியவனிடம் விசாரணை நடத்தியுள்ளனர். ஐரோப்பாவில் புலிகளுக்காக திரட்டப்படும் பணம், நெடியவனுக்கு அனுப்பிவைக்கபபடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நிபந்தனைப் பிணை அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டபோதிலும், எதிர்வரும் ஜூன் மாதம் 1ஆம் திகதி மீண்டும் நீதிமன்றில் ஆஜராகுமாறு நெடியவனுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## யாழ்.ஊடகவியலாளர் மீது இனந்தெரியாதோர் தாக்குதல்

(கொழும்பு)

உதயன் பத்திரிகையின் அலுவலகச் செய்தியாளர் ஒருவர் நேற்றுச் சனிக்கிழமை யாழ் இந்துக் கல்லூரிக்கு அருகில் வைத்து ஐந்துபேர் கொண்ட இனம் தெரியாத குண்டர் குழுவினரால் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளார்.

தாக்குதலுக்கு உள்ளான ஊடகவியலாளர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

எஸ்.கவிதரன் (வயது 36) சண்டிலிப்பாயைச் சேர்ந்த இவர் நேற்றுக் காலை வழமைபோல் தொழில் நிமித்தம் உதயன் அலுவலகத்திலிருந்து செய்தி சேகரிக்கச் சென்றுகொண்டிருந்தபோது, யாழ்.இந்துக் கல்லூரிக்கு அருகில் வைத்து தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

# பாசையூரில் வீதிப் போக்குவரத்து மக்களுக்கு தினசரி துன்பம்

(யாழ்ப்பாணம்)

பாசையூரில் உள்ள குறுக்கு வீதிகள் அனைத்தும் பல வருடங்களாகத் திருத்தப்படாமல் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முதலாம் குறுக்கு, இரண்டாம் குறுக்கு மற்றும் மூன்றாம் குறுக்கு வீதிகள் என்பன திருத்தப்படாமல் குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றன.

வெளியிடங்களில் இருந்து மீன் சந்தைக்கு வரும் பொதுமக்கள் இந்த வீதியால் பயணிக்கும் போது பலத்த இடையூறுகளைச் சந்திப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இங்கு சைக்கிள் பாதுகாப்பு நிலையம் இல்லாத காரணத்தால் சந்தைக்கு வரும் பொதுமக்கள் தங்கள் சைக்கிள்களை வீதியிலே நிறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் இதனூடாகப் பயணிக்கும் வாகனங்கள் முதல் மீன்களை ஏற்றிச் செல்ல வரும் கூலர்கள் மற்றும் தொழிலாளர்கள் தங்கள் தொழிலைக் கொண்டு செல்வதற்கும் பெரும் சிரமப்படுகின்றனர்..

அத்துடன், புனித அந்தோனியாரின் திருவிழா ஆரம்பமாவதற்கு இன்னும் ஒருவாரம் உள்ள நிலையில், தற்போது கடற்கரை வீதி வழியாக ஆலயத்திற்கு வரும் மக்களுக்கு பெரும் இடையூறாக இந்த வீதிகள் காணப்படுகின்றன.

மேலும் அங்குள்ள பொதுமக்கள் தங்கள் வீடுகளைக் கட்டுவதற்கும், திருத்தியமைப்பதற்கும் இந்த வீதியிலேயே கற்கள் மற்றும் மணல் என்பவற்றை பறித்திருப்பதால் இந்த வீதி வழியாக வாகனங்கள் சென்று வருவதற்கும் இடஞ்சலாகக் காணப்படுகின்றன.

தற்போது திறந்துவிடப்பட்டுள்ள கடற்கரை வீதிக்குத் தெரு விளக்குகள் இன்றி கடும் இருள் சூழ்ந்து காணப்படுகின்றன. பாசையூர் கடற்கரை வீதி வழியாகத் துண்டிக்குச் செல்லும் வீதியும் பாழடைந்து காணப்படுவதுடன், இந்த வீதிக்கு தெரு விளக்குகளும் பொருத்தப்படவில்லை. அதிகாலையில் கடற்றொழிலுக்குச் செல்லும் தொழிலாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு செல்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (21)

# எரிவாயு ஏற்றிவந்த பாரவூர்தி குடைசாய்ந்தது



(யாழ்ப்பாணம்)

காஸ் சிலிண்டர்களை ஏற்றிவந்த லொறி ஒன்றின் டயர் வெடித்ததில் அது கட்டுப்பாட்டையிழந்து வீதியோர மதிலுடன் மோதுண்டு சரிந்த சம்பவமொன்று அரியாலை மாம்பழம் சந்தியில் நேற்று சனிக்கிழமை பிற்பகல் நடைபெற்றுள்ளது. கொழும்பிலிருந்து காஸ் சிலிண்டர்களை ஏற்றிக்கொண்டு ஏ-9 வீதியால் வந்துகொண்டிருந்த லொறி, மாம்பழம் சந்தியைக் கடக்க முற்பட்ட சமயம் திடீரென அதன் பின் டயர் வெடித்ததில் கட்டுப்பாட்டையிழந்து பின்புறம் சரிந்து வீதியோர மதிலுடன் மோதியது.

இதன்போது வீதியோரம் இருந்த பிரதான மின்சாரக் கம்பம் ஒன்றும் முறிந்து விழுந்ததுடன், சில வர்த்தக நிலையப் பெயர்ப் பலகைகளும் சேதமடைந்தன. (02)

## புதிய நிர்வாகம் தெரிவு

(யாழ்ப்பாணம்)

மணியந்தோட்டம் ஜே/89 உதயபுரம் கிராமத்திற்கான கடற்தொழிலாளர் சங்கத்திற்கு புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் இடம்பெற்ற இவ் நிர்வாகத் தெரிவு நிகழ்வில், யாழ்.மாவட்ட கடற்தொழிலாளர் சம்மேளனத் தலைவர் எஸ்.தவரட்ணம், கடற்தொழில் பரிசோதகர் திவாகரன், நல்லூர் பிரதேச ஈ.பி.டி.பி. அமைப்பாளர் அ.இரவீந்திரதாசன், ஜே/89 கிராம சேவகர், குருநகர் பங்குத்தந்தை ஜோய், ஆர்.டி.எஸ். செயலாளர் அமல தாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது அப்பகுதி கடற்தொழிலாளர் சங்கத்தலைவராக கே.கொன்சன்ரைனும், செயலா ளராக ஜே.கிட்லரும், உப தலைவராக அன்னிகுயின் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (பா)

## கரவெட்டியில் புதிய சமாச நிர்வாகம்

(கரணவாய்)

கரவெட்டி பிரதேச சபையினால் சனசமூக நிலையங்களுக்கான கூட்டமும், சமாச நிர்வாகத் தெரிவும் அண்மையில் பிரதேசசபை செயலாளர் தலைமையில் நடைபெற்றது.

இதில் கோ.குணசிங்கம் தலைவராகவும், கு.மகாலிங்கம் செயலாளராகவும், ஆ.நாரேந்திரன் உப செயலாளராகவும், க.பரஞ்சோதி உப தலைவராகவும் அத்துடன் 4 பேர் கொண்ட நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.(18)

## ஆனைக்கோட்டை அடைக்கலநாயகி திருவிழா

(ஆனைக்கோட்டை)

ஆனைக்கோட்டை அடைக்கல அன்னை ஆலய வைகாசித் திருநாளையொட்டிய ஆயத்த வழிபாடுகள் நேற்று ஆரம்பமாகியது. தொடர்ந்து இன்று மாலை 5.00 மணிக்கு ஆயத்த வழிபாடும், நாளை மாலை 5.00 மணிக்கு நற்கருணை ஆராதனையும், எதிர்வரும் 31ஆம் திகதி காலை 6.30 மணிக்கு திருநாள் திருப்பலி யும், அன்னையின் திருச்சொரூப பவனியும் இடம்பெற்று, அன்னையின் அருட்கர ஆசீர்வாதமும் இடம்பெறவுள்ளது.

இத்திருநாள் கொண்டாட்டத்தில் அனைவரும் பங்குபற்றி அன்னையின் ஆசியை பெற்றுக் கொள்ளுமாறு ஆலய பங்குத் தந்தை அருட்பணி யோதிநாதன் கேட்டுள்ளார். (அ)

## தெற்கே செல்கிறது வடக்கின் கடல் உணவு

(வவுனியா)

முல்லைத்தீவில் பிடிக்கப்படும் மீன்கள், நண்டு, கணவாய் போன்ற கடல் உணவு வகைகள் அன்றைய தினமே கொழும்பிற்கு குளிரூட்டப்பட்ட வாகனங்கள் மூலம் எடுத்துச் செல்லப்படுகின்றது. ஒரு நாளைக்கு குறைந்தது ஐந்து வாகனங்களில் கடல் உணவு வகைகள் கொண்டு செல்லப்படுவதாக முல்லைத்தீவு மாவட்ட கடல் தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர். (39)


நோர்த்சீ லிமிட்டெட்

பாரம்பரியக் கைத்தொழில்கள் மற்றும் சிறு கைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு

களஞ்சிய கட்டடத் தொகுதி வாடகைக்கு வழங்குவதற்கான விண்ணப்ப அழைப்பு

நோர்த்சீ லிமிட்டெட் (சீநோர் என்றழைக்கப்படும் கட்டடத் தொகுதி) நிறுவனத்திற்குச் சொந்தமான களஞ்சியக் கட்டடத் தொகுதி வாடகைக்கு விடப்படவுள்ளது. பிரமாண்டமான இடம் சுமார் 25 லாரி பொருட்களைக் களஞ்சியப்படுத்தலாம். யாழ்.கோட்டைக்கு கிழக்குப் புறமான கடற்கரை வீதியில், 500 மீற்றர் தூரத்தில் போக்குவரவு, நீர் மற்றும் மின்சார வசதியுடன் கூடிய இடமாகும். வாடகைக்குப் பெற்றுக் கொள்ள ஆர்வமுள்ளவர்கள் 30.05.2011 இருந்து 03.06. 2011 வரை அலுவலக நேரங்களில் நேரில் பார்வையிட்டுத் தங்களது விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கலாம்.

பிரதிப் பொது முகாமையாளர்,
நோர்த்சீ லிமிட்டெட்,
தொ.பேசி : 021-2222733
தொலைநகல் : 021-2220713. மின்னஞ்சல் : northsealtd@sltnet.lk

C/737




கொழும்புத்துறை ஸ்ரீ நாகபூஷணி அம்மாள் ஆலயத்தில் நேற்றைய தினம் இரவு இடம்பெற்ற தீக்குளிப்பு சம்பவத்தின் படங்களைக் காணலாம். (52)

## மீன் எழுச்சித் திட்டம் வவுனியா வடக்கில் துரிதம்

(வவுனியா)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மீன் எழுச்சித் திட்டத்தின் கீழ் வவுனியா வடக்கு நெடுங்கேணியில் நீண்டகாலம் புனரமைக்கப்படாத 20 குளங்களும், விவசாயத் தேவைக்கு பயன்படுத்தப்படும் வீதிகளும் புனரமைக்கப்படவுள்ளது. இதற்குத் தேவைப்படும் நிதி கிடைக்கப்பெற்றுள்ளது என மாவட்ட மீன் எழுச்சித் திட்டத்திற்குப் பொறுப்பான பொறியியலாளர் தெரிவிக்கின்றார். (39)

## மின்சாரம் வேண்டும் மதியாமடு மக்கள் கோரிக்கை

(வவுனியா)

புளியங்குளம்-நெடுங்கேணி வீதியில் உள்ள மதியாமடு, நயினாமடு அதனை அண்மித்த கிராமங்களுக்கு இதுவரை மின்சார இணைப்புக்கள் ஏற்படுத்தப்படவில்லை.

விரைவில் இணைப்புக்களை ஏற்படுத்தித் தருமாறு கிராம மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். இங்கு இடம்பெயர்ந்த மக்கள் பெருமளவில் மீள்குடியேறியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (39)


யாழ்ப்பாணம்
விடுதலை பெருவிழா 2011
இயேசு விடுவிக்கிறார்
ஜூன் 2,3,4,5
தினமும் மாலை 4 மணிக்கு
இடம் :
மாநகர சபை மைதானம்
சுப்பிரமணியம் பூங்கா எதிரில்,
கண்டி ரோடு, யாழ்ப்பாணம்.
சகோ.மோகன் சி.லாசரஸ்
சகோ.A.அப்பாத்துரை



பாவம், வியாதி, கவலை, கண்ணீரிலிருந்து
விடுதலை பெற வாருங்கள்!
அனுமதி இலவசம்!
C/737






தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்

5ஆவது பிறந்த நாள்



பெயர் : இிராஜகுமாரன் சாம்சன்
முகவரி : செங்குந்தா வீதி, நல்லூர்.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

கடவுளிடம் உறுதியாகவும், தூய்மையாகவும், நம்பிக்கை உடையவனாகவும் இருந்தால் வாழ்க்கையில் ஏற்படும் அனைத்துவிதமான இடைஞ்சல்களும் மறைந்துவிடும்.

-விவேகானந்தர்-

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## பூசாரிகளின் பொறுப்பின்மை

இப்போதும்கூட, அதிகாரிகளின் அசமந்தப் போக்கு குறித்த புகார்கள் நிறைய வந்தவண்ணம் உள்ளன. நொந்த மாட்டை நுகத்தடி கொண்டு இழுத்தது போல மக்களுக்கு மேலும் மேலும் கஷ்டங்கள் சுமத்துவது பற்றி சில அதிகாரிகள் கவலைப்படுவதாகவே தெரியவில்லை.

இத்தனைக்கும் பொதுவெளிகளில் பேசும் போதும், உள்வட்டத்துக்குள்ளான உரையாடல்களின் போதும், ஏன் தத்தம் மனதுக்குள்ளேயே நியாய உணர்வுகள் பொங்கும் போதெல்லாம் மக்கள் அவலங்களுக்காகக் கண்ணீர் சிந்துபவர்கள்தான் இவர்கள். மக்கள் படும் துயரங்களுக்கெல்லாம் காரணமாகத் தாங்கள் அறியும் யார் யாரையெல்லாமோ கண்டித்துச் சாடிக் கொண்டிருப்பவர்கள்தான்! மக்களின் துன்பங்களுக்காகக் குமுறிச் சம்பந்தப்பட்டவர்கள் மீது காட்டமான விமர்சனங்களைக் கொண்டிருப்பவர்கள்தான்!

ஆனால், தங்களது நிர்வாகத்தின் கீழான கடமைகள் என்று வரும்போது, மக்களைக் கஷ்டப்பட வைப்பதற்கும், அது பற்றிய குற்ற உணர்வு கூட நினைவில் படாமல் இருப்பதற்குமான சால்ஜாப்புகளெல்லாம் இவர்களுக்குக் கிடைத்து விடுகின்றன.

சாமி வரங்கள் வந்து கிடந்தாலும் பூசாரிகளைத் தாண்டி அதை எடுக்கமுடியாமலிருப்பதாக மக்கள் மனம் வெம்பிச் செல்லும் காட்சிகள் இவர்கள் கவனத்தைக் கலைப்பதில்லை. தங்களுக்குக் கிடைத்த பொருட்களை நிவாரணங்களைக் கூட பெறமுடியாமல் ஏமாறும் மக்கள் வேதனை உறுத்துவதில்லை. தங்கள் அலட்சியத்தையும் ஊழலையும் கூட உறுத்தாமல் செய்வதற்கான காரணங்களையும் நியாயங்களையும் மட்டும் வேண்டியளவு வைத்திருக்கிறார்கள்.

தலைவர்கள் மீது, அரசாங்கத்தின் மீது, சர்வதேசத்தின் மீது ஏன் பிரபஞ்ச நியதிகளின் மீது கூட இவர்களுக்கு ஆயிரமாயிரமாய்க் குறைகள், குற்றச்சாட்டுக்கள் உண்டு. ஆனால், தங்கள் குறைகளை மட்டும் இவர்கள் மனம் சென்று தொடுவதில்லை.

எனவே, இந்த அதிகாரிகளும் மத்தியதர வர்க்கத்து மக்கள் போலவே எங்கெங்கோ உள்ள குறைகள் பற்றிக் காரசாரமாக விவாதித்துக் கொண்டிருப்பார்கள். தவிர, பொதுவான மக்களின் துன்பங்களுக்குக் காரணமாய் தங்களிடமுள்ள குறைகளைத் தங்கள் நினைவில் கொண்டுவரவே மாட்டார்கள்.

அரிஸ்டோட்டிலோ யாரோ சொல்லியிருக்கிறார்கள். உலகைப் பற்றிய பெரும் கவலை எல்லாம் வேணடாம். நீ உன் தோட்டத்தில் உன் மூலையைக் கவனித்துக் கொண்டால் போதும் என்று. யார் யாரிலோ பிழைகள் கண்டுபிடித்தபடி, தம் அலுவல்களில் மெத்தனமாக இருந்து கொள்ளும் அதிகாரிகள், தாங்கள் பொதுமக்களின் சேவகர்கள் என்பதை உணர வேண்டும்.

துரதிர்ஷ்டவசமாக இதை அதிகாரிகள் மறந்திருப்பது மட்டுமல்ல; மக்களுக்கும், அவர்கள் தமக்குச் சேவை செய்வதற்காகவே ஊழியம் கொடுத்து நியமிக்கப்பட்டிருப்பவர்கள் என்பது மறந்து போவது தான் பேரவலம்!

-ஆசிரியர்-

## மதகுருமார்கள் இந்தியா செல்ல விசா பெறும் நடைமுறையில் தளர்வு



(யாழ்ப்பாணம்)

மதகுருமார், சமயப் பெரியார் சமய சம்மந்தமான கற்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு இந்தியா செல்வதற்கான தற்போதைய விசா பெறும் நடைமுறைகளில் தளர்வை ஏற்படுத்தி அவர்கள் இலகுவாக விஸாவைப பெற்றுச் சென்றுவரக்கூடிய நடைமுறையினை விரைவில் அமுல்படுத்த நடவடிக்கை எடுப்பதாக இந்திய துணைத்தூதுவர் வி.மகாலிங்கம் உறுதியளித்தார்.

நேற்று நல்லூரில் அமைந்துள்ள துர்க்கா மணிமண்டபத்தில் நடைபெற்ற அகில இலங்கை இந்து மாமன்றத்தின் சிவத்தொண்டர் மகாநாட்டு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வுறுதிமொழியை வழங்கினார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில், இவ்வாறு குறித்த சமயசம்மந்தமான நிகழ்வுகளிலும் கற்கைநெறிகளிலும் பங்குபற்றுவதற்கு இந்தியா சென்றுவருவதற்கான விஸா பெறுவது சம்மந்தமான நடைமுறைகள் இந்திய அரசாங்கத்துடன் கதைத்து அந்நடைமுறையை இலகுபடுத்தவுள்ளதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் மன்னார் மாவட்டத்தில் அமைந்திருக்கும் திருக்கேதீஸ்வரம் ஆலயத்தையும் இந்திய அரசாங்கம் புனரமைப்புச்செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் விரைவில் அவ் ஆலயம் புனரமைப்புச் செய்து முடிக்கப்படவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இன்றைய நாளில் இந்து ஆராட்சி நிறுவனம் புதிதாக தொடங்கப்பட்டிருப்பதும் அதற்கு ஆறுதிருமுருகன் தலைமைப் பொறுப்பு ஏற்றிருப்பது குறித்தும் தாம் மகிழ்ச்சி கொள்வதாகவும் தெரிவித்தார். மேலும் அகில இலங்கை இந்துமாமன்றம் சமூக நலத்திட்டமூலம் பசுமாடு,மற்றும் தையல் இயந்திரம் மக்களுக்கு வழங்குவதையிட்டு தாம் மிகுந்த மகிழ்ச்சி கொள்வதாகவும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் நல்லை ஆதீனம் சோமசுந்தர பிரமாச்சாரிய சுவாமிகள், ஆறுதிருமுருகன் அவர்களுக்கு 'சைவஞான பாணு' எனனும் பட்டம வழங்கிக் கௌரவித்தார். அத்துடன் ஆறுதிருமுருகனின் தாயார் ஆறுமுகம் சரஸ்வதி அம்மா அவர்களும் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார். (பா)

## இந்துப் பூசகர்களுக்கான பயிற்சி ஜூலையில் நடத்துவதற்கு ஏற்பாடு

(கொழும்பு)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரனையுடன் வருடந்தோறும் நடாத்தப்படும் அந்தணர் அல்லாத இந்துப் பூசகர்களுக்கான பயிற்சி இவ்வாண்டும் எதிர்வரும் ஜூலை மாதத்தில் நடாத்தப்படவுள்ளதாக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக் களத்தின் பணிப்பாளர் சாந்தி நாவுக்கரசன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு-நாவற்குடா கலாசார நிலையத்தில் இரண்டு வாரங்களுக்கு நடைபெறவுள்ள பயிற்சியில் கலந்துகொள்ளும் அந்தணர் அல்லாத இந்துப் பூசகர்களுக்கு தமிழகக் கிராமக் கோயில் பூசாரிகள் பேரவையைச சேர்ந்த விரிவுரையாளர்களால் விரிவுரை வழங்கப்படவுள்ளது.

ஒவ்வொரு பிரதேசத்திலுமுள்ள இந்து ஆலயங்களில் பணிபுரியும் ஏற்கனவே பயிற்சி பெறாத 15 வயதிற்கும் 50 வயதிற்கும் இடைப்பட்ட அந்தணர் அல்லாத இந்துப் பூசகர்களின் பெயர், முகவரி,கடமையாற்றும் ஆலயம், தேசிய அடையாள அட்டை இலக்கம், தொலைபேசி இலக்கம் என்பவற்றை எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்குமாறு சகல பிரதேச செயலாளர்களையும் கேட்டுள்ளதாகவும் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

## தீயில் கருகிய பெண் உயிரிழப்பு — கணவர் சிறுகாயங்களுடன் தப்பினார்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவுப் பகுதியில் குடும்பப் பெண்ணொருவர் தனக்குத் தானே மண்ணெண்ணை ஊற்றித் தீ மூட்டித் தற்கொலை செய்த சம்பவமொன்று கடந்த வியாழக்கிழமை பிற்பகல் நடைபெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் தீயை அணைக்க முற்பட்ட குறித்த பெண்ணின கணவரும் எரிகாயங்களுக்கு இலக்காகியுள்ளார்.

நெடுந்தீவு 8ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த அன்ரன் சகாயராணி (வயது-36) என்ற குடும்பப் பெண்ணே மரணமானவராவார்.

இச்சம்பவத்தின்போது அவரது கணவரான சி.அன்ரன் (வயது-36) என்பவர் எரிகாயங்களுக்குள்ளானார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது-

சம்பவதினம் பிற்பகல் 3.30 மணியளவில் கணவன் மனைவி இருவருக்கும் இடையிலான சண்டையின்போது குறித்த பெண தன்மீது மண்ணெண்ணையை ஊற்றித் தீயைப் பற்றவைத்துள்ளார்.

அவர் மீது தீ மேற்கொண்டு பரவவிடாது அதனை அணைக்கும் முயற்சியில் அவரது கணவர் ஈடுபட்டுள்ளார். இருந்தபோதும் அப்பெண் கடுமையாக தீயினால காயமடைய அவரை நெடுந்தீவில் இருந்து கடும் முயற்சியின் பின்னர் யாழ்.வைத்தியசாலைக்கு இரவு 8.30 மணிக்கே எடுத்துவர முடிந்துள்ளது. எனினும் அப்பெண அன்றைய தினம் நள்ளிரவைத் தாண்டி உயிரிழந்துள்ளதாகத் தெரியவருகின்றது.

இதேவேளை இவரது கணவரின் இரு கைகளிலும் கடுமையான தீக்காயங்களுக்கு இலக்காகியுள்ளதாகத் தெரியவருகின்றது. (பா)

## 505 மாணவர்கள் பங்கேற்ற ஆங்கில தினப் போட்டி

(பூநகரி)

பூநகரி கல்விக்கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான ஆங்கில தினப்போட்டி நேற்றுமுன்தினம் ஜெயபுரம் மகாவித்தியாலயத்தில் காலை 9 மணிக்கு நடைபெற்றது.

இப்போட்டியில் இம்முறை பூநகரிக் கோட்டப் பாடசாலைகளில் இருந்து 505 மாணவர்கள் பங்கேற்றிருந்தனர்.

போட்டி ஆரம்ப நிகழ்வில் கிளிநொச்சி வலய ஆங்கிலப் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.மயில்வாகனம் உட்பட ஆங்கிலப்பாட ஆசிரியர்களும் கலந்துகொண்டனர்.

இப்போட்டியில் முதல் இரு இடங்களைப் பெற்றவர்கள் கிளிநொச்சி வலயமட்டப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

பூநகரிக்கோட்ட கல்விப் பணிப்பாளர் எஸ்.தர்மரட்ணம், ஜெயபுரம் மகாவித்தியாலய அதிபர் என்.நடேசமூர்த்தி, பரமன் கிராமப் பாடசாலை அதிபரும், போட்டிச் செயலாளருமான ப.ஆனந்தராசா, அருட்சகோதரி றோஸ்மேரி ஆகியோர் மங்கள விளக்கேற்றிப் போட்டியை ஆரம்பத்து வைத்தனர். (112)

## அரச ஊழியர்களுக்கான சிங்கள வகுப்புக்கள்

(சாவகச்சேரி)

வடமாகாண முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி நிறுவனத்தினால் நடத்தப்படும் யாழ்.மாவட்ட அரச ஊழியர்களுக்கான சிங்கள வகுப்புக்கள் நேற்று ஆரம்பமாகி இன்று நடைபெறுகின்றது.

யாழ்.மாவட்டத்தில் 7 நிலையங்களில் நடைபெற்று வரும் இப் பயிற்சி வகுப்புக்களில் இன்று பி.ப. 2 மணிக்கு கரவெட்டி பிரதேச செயலக மண்டபத்திலும், பி.ப. 3 மணிக்கு பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்திலும், பி.ப. 4 மணிக்கு சாவகச்சேரி நகராட்சி மன்றத்திலும் நடைபெறவுள்ளதாக பயிற்சி நிறுவனப் பணிப்பாளர் இ.கிருஷ்ணானந்தன் அறிவித்துள்ளார். (11)

# மனித நேயமுள்ள மாணவர்களை உருவாக்க
# முல்லை கல்வி வலயத்தில் சிறுகதைப்போட்டி

(முல்லைத்தீவு)

கனடா வாழ் வன்னிச் சமூகத்தினரால் மனித மேம்பாட்டுக் கோட்பாடுகளுக்கான அறிவியலை வளர்ப்பதன் மூலம் மனித நேயமுள்ள குழந்தைகளை உருவாக்கும் நோக்கத்துடன் முல்லைத்தீவு மாவட்டத்தின் கல்வி வலயங்களான முல்லைத்தீவு மற்றும் துணுக்காய் வலயங்களில் கீழுள்ள பாடசாலை மாணவர்களிடையே சிறுகதைப் போட்டி ஒன்றினை நடாத்தப்படவுள்ளது. இப்போட்டியானது பாலர் பிரிவு (தரம் 5 - 7 வரை), கீழ்ப் பிரிவு (தரம் 8 - 10 வரை), மேற் பிரிவு (தரம் 11 - 12 வரை) என மூன்று பிரிவுகளாக நடத்தப்படவுள்ளது.

மேற்பிரிவில் பங்குபற்றுபவர்களின் ஆக்கங்களை 10 - 15 பக்கங்களுக்கு உட்பட்டதாகவும், கீழ்பிரிவில் பங்குபற்றுபவர்களின் ஆக்கங்கள் 8 - 12 பக்கங்களுக்கு உட்பட்டதாகவும், பாலர் பிரிவில் பங்குபற்றுபவர்களின் ஆக்கங்கள் 6 - 8 பக்கங்களுக்கு உட்பட்டதாகவும் அமைய வேண்டும் எனவும், ஒவ்வோர் பக்கமும் 90 தொடக்கம் 100 சொற்களைக் கொண்டதாக இருத்தல் வேண்டும் எனவும் ஒழுங்கமைப்புக் குழுவினர் கேட்டுக் கொண்டுள்ளனர். இச்சிறுகதைகள் அன்பு, நேர்மை, ஒற்றுமை, அகிம்சை, ஒழுக்கம், மன்னித்தல், உண்மை பேசுதல், தன்னம்பிக்கை, மதிப்புக் கொடுத்தல், பிறர் நலம் பேணல், சமாதானம், விடா முயற்சி ஆகிய 12 தலைப்புக்களில் ஒன்றாக அமைதல் வேண்டும் எனவும் மேலும் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் ஒவ்வோர் தலைப்புப் பிரிவிலும் கிடைக்கப்பெறும் ஆக்கங்களில் திறமையானதாகக் கருதப்படும் இரண்டு சிறுகதைகள் தெரிவு செய்யப்பட்டு, 5,000 ரூபா வீதம் பணப் பரிசில்கள் வழங்கப்படுவதுடன், தேர்வு செய்யப்படுபவர்கள் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்பவர்களாக இருந்தால் அவர்களின் பல்கலைக்கழக படிப்பு நிறைவு பெறும் வரை ஒரு உதவித் தொகை மாதா மாதம் வழங்கப்படும் எனவும், மிகவும் தரமான சிறுகதைகள் தெரிவு செய்யப்பட்டு புத்தகமாக வெளியிடுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் ஒழுங்கமைப்புக் குழுவினர் மேலும் தெரிவித்தனர். (42)

## நவீல்ட் பாடசாலைக்கு நிதி உதவி

(யாழ்ப்பாணம்)

கைதடியில் உள்ள நவீல்ட பாடசாலை மாணவர்களின் கல்வி மற்றும் வாழ்வாதார மேம்பாட்டுக்காக வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் 20 ஆயிரம் ரூபாவினை அன்பளிப்புச் செய்துள்ளது.

அரியாலை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள் ஏழாயிரம் ரூபாவினையும், சமாசப் பணியாளர்கள் ஐந்தாயிரம் ரூபாவினையும், சமாசத் தலைவர் த. சிவலிங்கம் ஐந்தாயிரம் ரூபாவினையும், சமாசத்தின் நிதியில் இருந்து மூவாயிரம் ரூபாவுமாக மொத்தமாக 20 ஆயிரம் ரூபாவினை பாடசாலை அதிபரிடம் கையளிக்கப்பட்டது.

## இரதோற்சவம்

(ஆனைக்கோட்டை)

அந்திக்குழி அருள்மிகு ஸ்ரீ ஞானவைரவர் காளி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் கடந்த 23ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. இவ் உற்சவத்தில் எதிரவரும் 31ஆம் திகதி இரதோற்சவமும் முதலாம் திகதி தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன. (104)

## விசாகப் பொங்கல்

(வடமராட்சி கிழக்கு)

முகாவில் திரியாய அம்மன் ஆலய விசாகப் பொங்கல் நிகழ்வு எதிர்வரும் 3ஆம் திகதி விளக்கு வைப்புடன் ஆரம்பமாகி எதிர்வரும் 10ஆம் திகதி வரை பொங்கல் விழா வழமைபோல் சிறப்பாக நடைபெறவுள்ளது. இதில் அன்றைய தினம் பகல் பூசை வழிபாடுகளும் இரவு பொங்கல் விழாவும் நடைபெறவுள்ளது. (38)

## "பனங்கூடல்" சஞ்சிகை வெளியிட ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

பனை அபிவிருத்திச் சபை சூழல் பாதுகாப்பையும் பொருளாதார மேம்பாட்டையும் கருத்திற்கொண்டு "பனங்கூடல்" என்னும் மாதாந்தச் சஞ்சிகை ஒன்றை வெளியிட விருப்பதாக பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பசுபதி சீவரத்தினம் தெரிவித்துள்ளார்.

இச்சஞ்சிகை வெளியீட்டுக்கு பனை வளத்தை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் நிறுவனங்களை உதவ வேண்டுமெனவும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## சுயதொழில் கடன் வழங்கும் திட்டத்திற்கு 370 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டனர்

(சாவகச்சேரி)

புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சினால் முன்னெடுக்கப்படும் சுய தொழில் கடன் வழங்கும் திட்டத்தின் கீழ் தென்மராட்சி பிரதேச செயலகத்தில் கடனைப் பெறுவதற்காக விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகத் தேர்வு நேற்று முன்தினம் 3.00 மணிக்குப் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

இத்திட்டத்தின் கீழ் கரவெட்டி பிரதேசத்திலிருந்து 80 பயனாளிகளும், சாவகச்சேரி பிரதேசத்திலிருந்து 130 பயனாளிகளும், மருதங்கேணி பிரதேசத்திலிருந்து 80 பயனாளிகளும், பருத்தித்துறைப் பிரதேசத்திலிருந்து 80 பயனாளிகளும் நேர்முகத் தேர்வின் மூலம் மிகவும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் பயனாளிகளே தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு இக்கடன் உதவிகள் வழங்கப்படவுள்ளது. இதில் ஒரு பயனாளிகளுக்கு இரண்டு இலட் சத்து 50 ஆயிரம் ரூபா விற்குட்பட்ட தொகை கடனாக வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (19)

## முல்லை மாவட்டத்தில் கைவிடப்பட்ட சொத்துக்களை மீளப்பெறுவதில் சிரமம்

(கிளிநொச்சி)

முல்லைத்தீவு மாவட்டத்தில் போரின் போது கைவிடப்பட்ட சொத்துக்களை மீளப் பெறுவதில் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாகப் போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் விசுவமடுப் பகுதிக்கு அப்பால் முல்லைத்தீவு மாவட்டத்திலேயே அதிகமான சொத்துக்களை கைவிட்டிருந்தனர்.

இந்தச் சொத்துக்களை மீளப் பெறுவது தொடர்பான நடைமுறைகள் இருந்தபோதிலும், அது துரிதப்படுத்தப்படாமையால் அந்தச் சொத்துக்களை மீளப் பெறமுடியாத நிலை காணப்படுவதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்களுடைய சொத்துக்களைப் பெற்றுக் கொள்வதில் ஆவலாக இருப்பதாகவும், இது தொடர்பாக உரிய அதிகாரிகள் ஆவன செய்யவேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (28)

## சுழற்சிமுறையில் நீர் இறைக்கும் இயந்திரம்

(கட்டுவன்)

என்றிப் மீள் எழுச்சித்திட்டத்தினால் தெல்லிப்பளை பிரதேச செயலகத்திற்கு 20 நீர் இறைக்கும் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இவ் நீர் இறைக்கும் இயந்திரங்கள் மீள் குடியேற்றத் தேவைகளுக்குப் பயன்படுத்துவதற்காகவே வழங்கப்பட்டுள்ளதுடன், இதன மூலம் மக்கள் மீள்குடியேற்றப்பட்ட பிரதேசங்களிலுள்ள கிணறுகளை சுத்திகரிப்பதற்குப் பயன்படுத் தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை குறித்த பிரதேச செயலகத்தினால் கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கு சுழற்சி முறையில் இவ் நீர் இறைக்கும் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஒரு கிராம அபிவிருத்திச் சங்கம் 2 மாதத்திற்குப் பயன்படுத்துவதுடன், அந்தக் காலப்பகுதிக்குள் சராசரியாக 50 கிணறுகள் மூன்று முறை சுத்திகரிக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் நீர் இறைக்கும் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இவற்றுக்கான எரிபொருள் அளவெட்டி, மல்லாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினூடாக வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (29)

## பன்மைத்துவ கலாசாரம் ஊடாக சமாதானம்; மாணவர்களுக்கிடையேயான போட்டி முடிவுகள்

(பருத்தித்துறை)

பன்மைத்துவக் கலாசாரம் ஊடாக சமாதானம் என்னும் தொனிப்பொருளில் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடைபெற்ற கவிதை, சித்திரப் போட்டியில் மருதங்கேணி கோட்டத்தில் வெற்றி பெற்ற மாணவர்களின் விபரம் மருதங்கேணி கோட்டக் கல்வி அலுவலகத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.

இப்போட்டியில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்கள் விபரம் வருமாறு:

**கவிதை**

பிரிவு 1: ஜே. ஜெயவினிதன் (யாழ். ஆழியவளை சி.சி.ரி.எம்.எஸ்), ஏ. டினேசன் (யாழ். மணற்காடு ஆர்.சி.ரி.எம்.எஸ்), கே. துலக்ஷனா (யாழ். உடுத்துறை ம.வி.)

பிரிவு 2 : என். டினுசா (யாழ். மணற்காடு ஆர்.சி.ரி.எம்.எஸ்), ரி. பிருந்தா (யாழ். ஆழியவளை சி.சி.ரி. எம்.எஸ்.), எஸ். அரிதாஸ் (யாழ். நாகர்கோவில் ம.வி.)

பிரிவு 3: ஆர். ராம்ஜி (யாழ். உடுத்துறை ம.வி.), ஏ. சரண்சியா (யாழ். நாகர்கோவில் ம.வி.), இ. பிரதீப் (யாழ். வெற்றிலைக்கேணி பரமேஸ்வரி வித்தியாலயம்)

பிரிவு 4: ஏ. அகிதா (யாழ். உடுத்துறை ம.வி.)

**சித்திரம்**

பிரிவு 1: நிக்ஷன் அருள்நிலா (யாழ். மருதங்கேணி ஏச். ரி. எம்.எஸ்.), ஜெ. லாவண்யா (தாளையடி ஆர்.சி.ரி. எம்.எஸ்.), எஸ். சரண்யா (யாழ். உடுத்துறை ம.வி.)

பிரிவு 2: கே. சசிதரன் (யாழ். மருதங்கேணி ஏச்.ரி. எம்.எஸ்), கே. தினுஷா (யாழ். மருதங்கேணி ஏச்.ரி. எம்.எஸ்), ரி. சுகிதா (யாழ். தாளையடி ஆர்.சி.ரி. எம்.எஸ்)

பிரிவு 3: எஸ். கஜந் (யாழ். மருதங்கேணி ஏச்.ரி.எம்.எஸ்), ஏ. டிதர்சன் (யாழ். தாளையடி ஆர்.சி.ரி.எம்.எஸ்.) என். மிதுஷன் (யாழ். குடத்தனை கரையூர் ஏ.எம்.ரி. எம்.எஸ்.)

பிரிவு 4 : ஏ. பிரசாந்த் (யாழ். மணற்காடு ஆர்.சி.ரி.எம்.எஸ்), ஜெ. ஜெயதர்சன் (யாழ். தாளையடி ஆர்.சி.ரி.எம்.எஸ்.), ஆர். சதீஸ் (யாழ். வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தி) (109)

## வவுனியாவில் எலிக்காய்ச்சல்; ஆய்வு நடைபெறுகிறது

(வவுனியா)

வவுனியா பொதுவைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவிற்கு காய்ச்சலுக்கு சிகிச்சை பெறவரும் நோயாளர்களுக்கு எலிக்காய்ச்சல் அறிகுறி தென்படுகின்றதா என்பதினை அறியும் நடைமுறை பின்பற்றப்படுகின்றது என மாவட்ட சுகாதார வைத்தியசாலை அதிகாரி டாக்டர் பி. சத்தியலிங்கம் தெரிவித்தார்.

எலிக்காய்ச்சல் நோய்க்கு சிகிச்சையளிப்பது தொடர்பான அறிவுறுத்தல்கள் வைத்திய அதிகாரிகளுக்கு தெளிவுபடுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். இவ்வாண்டு முதல் காலாண்டில் 35 பேர் எலிக்காய்ச்சலுக்கு வவுனியா பொதுவைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (39)







அகில இலங்கை இந்து மாமன்றம் நேற்று ஸ்ரீ துர்க்காதேவி மணி மண்டப நாவலர் அரங்கில் நடத்திய சிவதொண்டர் மாநாட்டில் விருந்தினர்கள் இறைவணக்கம் செய்வதையும், செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகனுக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதையும், நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் காணலாம். (படம் : பார்த்தீபன்)

# நெடுங்கேணிப் பிரதேச செயலர் பிரிவில் அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுப்பு

(வவுனியா)

போரின் காரணமாக பாதிக்கப்பட்ட வவுனியா வடக்கு நெடுங்கேணி பிரதேச செயலாளர் பிரிவில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என வவுனியா மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எம்.எஸ்.சாள்ஸ் நெடுங்கேணியில் அபிவிருத்தித் திட்டம் ஒன்றினை ஆரம்பித்து வைத்து பேசியபோது குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

மக்களுடைய இயல்பு வாழ்க்கைக்காக உள்கட்டமைப்பு வசதிகள் உட்பட ஏனைய வாழ்வாதார செயற்பாடுகளுக்காக பல மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளன. முதலில் மக்களுக்கு அவசியமான தேவைகள் இனம் காணப்பட்டுள்ளது.

வீதி புனரமைப்பு வேலைகள் தொடங்கப்பட்டுள்ளது. மேலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளது.

பாடசாலைகளும் புனரமைக்கப்படும். அதற்கும் மேலாக பஸ் நிலையம், சந்தைக் கட்டடம், கூட்டுறவுச் சங்கத்திற்கு நெல் கொள்வனவு, களஞ்சியசாலை, உரக்களஞ்சியசாலை, நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய அரிசி பதனிடும் சாலையும் அமைக்கப்படவுள்ளது எனத் தெரிவித்தார். (39)

## இறைச்சிக்காக வெட்டப்படும் கைவிடப்பட்ட கால்நடைகள்

(முரசுமோட்டை)

முல்லைத்தீவு - வேரவில் பகுதியில் கைவிடப்பட்ட கால்நடைகளைக் களவாடி அவற்றை இறைச்சிக்காக வெட்டும் சம்பவங்கள் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மீள்குடியேற்றம் செய்யப்படாத முல்லைத்தீவு மாவட்டத்தில் சில பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்களின் கால்நடைகள் வேரவில், பிரமந்தனாறு போன்ற பகுதிகளில் கட்டாக்காலிகளாகக் காணப்படுவதாகவும் இந்தக் கால்நடைகளை அங்குள்ள சில விசமிகள் களவாகக் கொண்டு சென்று அவற்றை இறைச்சிக்காக வெட்டுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான சம்பவங்கள் தொடர்பாக இப்பகுதி கிராம அலுவலருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது,

மேற்படி சம்பவங்களை முழுமையாக கட்டுப்படுத்துவதற்கு சகல திணைக்களங்களும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும். அந்த மக்களுடைய சொத்துக்களைப் பராமரிக்க வேண்டிய பொறுப்பு எங்களுடையது எனவே, இவ்வாறான செயற்பாடுகளை முற்றாக இல்லாதொழிக்க அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என அவர் கூறினார். (110)

## நீர் இறைக்கும் இயந்திரம் வழங்கப்படவுள்ளது

(வடமராட்சி)

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தினால் கரைச்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த விவசாயிகளுக்கு 100 நீர் இறைக் கும் இயந்திரங்கள் வழங்கப்படவுள்ளது.

ஏற்கனவே நீர் இறைக்கும் இயந்திரங்கள் வழங்கப்படாத விவசாயிகளுக்கே இந்த நீர் இறைக்கும் இயந்திரம் வழங்கப்படவுள்ளது.

இந்த நீர் இறைக்கும் இயந்திரம் பெறத் தகுதியுடைய விவசாயிகளை கிராம அலுவலர்கள் தெரிவுசெய்து வருகின்றனர். (100)

## ஊடக கற்கை மாணவர்களின் பத்திரிகை பதிவொளி வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக 3 ஆம் வருட ஊடக கற்கை மாணவர்களால் வெளியிடப்படும் பத்திரிகை பதிவொளி பல்கலையன் பயிற்சி இதழ்நூல் வெளியீடு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

ஊடக கற்கை மாணவன் சி.லோகிதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் செல்வி வசந்தி அரசரட்ணம் பிரதம விருந்தினராகவும், யாழ். பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் நா.ஞானக்குமாரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

பத்திரிகை பதிவொளி ஆவணபடம் மற்றும் பல்கலையன் நூலையும் பிரதம விருந்தினர் வெளியிட்டு வைக்க சிறப்பு விருந்தினர் பெற்றுக்கொள்ளவுள்ளார்.

தொடர்ந்து பத்திரிகை பதிவொளி ஆவணப்படத்தின் மதிப்பீட்டுரையை யாழ். பல்கலைக்கழக நாடகமும் அரங்கியலும் விரிவுரையாளர் திருமதி க.நவதர்சினி, பல்கலையன் இதழ் மதிப்பீட்டுரையை அதிபர் ந.விஜயசுந்தரம் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

## சர்வதேச இளைஞர் ஆண்டு விழா

(வவுனியா)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் சர்வதேச இளைஞர் ஆண்டு விழாவின் தேசிய வைபவம் வவுனியா நகரசபை மைதானத்தில் யூன் மாதம் 4 ஆம் திகதி மிகவும் சிறப்பான முறையில் கொண்டாடுவதற்குரிய தயார்படுத்தல் வேலைகள் நடைபெற்று வருகின்றது என "தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வடமாகாண பணிப்பாளர் திருமதி எஸ்.விமலேஸ்வரி தெரிவித்தார்.

மாவட்ட ரீதியிலான இளைஞர் விழாக்கள் வடமாகாணத்தில் சகல மாவட்டங்களிலும் நடாத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

இந்த வைபவங்களில் சாதனை படைத்த இளைஞர்கள் கௌரவித்தல், விளையாட்டுப் போட்டிகள், கலாசார நிகழ்வுகள் முக்கிய அம்சமாக அமையும். (39)

## முரசுமோட்டைப் பகுதியில் தொடரும் திருட்டுக்கள்

(முரசுமோட்டை)

கிளிநொச்சி, முரசுமோட்டைப் பகுதியில் தொடர்ச்சியாக திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வியாழக்கிழமை இரவு முரசுமோட்டை 2 ஆம் யுனிற் பகுதியில் கிணற்றுக்கருகில் பொருத்தப்பட்டிருந்த 50 ஆயிரம் ரூபா பெறுமதியான நீர் இறைக்கும் இயந்திரம் களவாடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த பகுதியில் தோட்டத்திற்கு நீர் இறைத்து விட்டு இயந்திரத்தை கிணற்றுக்கருகில் வைத்திருந்தபோது இரவுவேளை திருடர்கள் இதனை திருடிச் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதைவிட கடந்த வாரம் இரண்டு வீடுகளில் கட்டப்பட்டிருந்த கால்நடைகளைத் திருடர்கள் களவாடிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு தொடர்ச்சியாக திருட்டுச் சம்பவங்கள் இப்பகுதிகளில் இடம பெற்று வருவதால், தாம் அச்சத்துடன் வாழ்வதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (110)

நாங்க சின்னஞ் சிறிசா இருக்கேக்கையே உந்த யாழ்ப்பாண மணிக்கூட்டுக் கோபுரத்தைக் கண்டிருக்கிறம்.

உப்பிடித்தான் எனக்கு ஐஞ்சு வயதிருக்கும். அம்மா செத்தோடனை அம்மாவேட தங்கச்சியை அப்பர் கட்டினவர். நான்தான் மூத்த ஆம்பிளைப் பிள்ளையெண்டு செல்லம். அவருக்குப் புதுமாப்பிள்ளை சாமான்கள் வாங்க யாழ்ப்பாணப் பெரியகடைக்கு போகேக்கை என்னயும் கூட்டிக்கொண்டு போனவை. நானப்ப பிடிச்சாப் பிடிச்சிராவிதான். அந்த நாளேல பிரபலமான அயோசியஸ் கடைக்குப் போனப்ப அங்க சோக்கேசில வைச்சிருந்த கைமணிக் கூட்டக் கண்டிட்டு எனக்கு வேணுமெண்டு ஒற்றைக் காலில நிண்டான்.

மணிக்கூடு வாங்காமல் கடையை விட்டுக் கிளம்பவும்நான் பெலத்த குழப்படி செய்தன். ஒரு மாதிரித் துக்கிக் காரில ஏத்திக்கொண்டு போகேக்க இந்த மணிக்கூட்டுக் கோபுர வீதியால கார் போகேக்க எனக்கிந்த மணிக்கூட்டுக் கோபுரத்தைக் காட்டி ஏமாத்தின விசயம் இப்பவும் எனக்குச் சாடைமாடையாக ஞாபகத்திலுண்டு.

இந்த மணிக்கூட்டுக் கோபுரம் பிரிட்டிஷ் காரங்களால அமைச்சதாம். ஒருக்கா கந்தையன் நகர முதல்வராக இருக்கேக்க திருத்தப்பட்டு பிரிட்டிஷ்காரர் வந்து திறந்து வைச்சிட்டுப் போனவை. அப்பவெல்லாம் இலக்கங்களை சின்ன முளளும், பெரிய முள்ளும் நேரத்தைக் காட்டிக் கொண்டிருந்தன. அப்பவும் பலதடவை இந்த மணிக்கூடுகள் பழுதாப் போனது. அந்தப் புள்ளி விபரம் இருக்குதோ என்னவோ?



இப்ப ரெண்டொரு வருசத்துக்கு முன்னாலதான் உந்த எலற்றோனிக் மணிக்கூடுகள் பூட்டினவங்கள். அது எந்த நேரத்தில் பூட்டினாங்களோ கிழமைக்கொருக்காப் பழுதுபட்டுப் போயிடும்.

உப்பிடித்தான் உந்த மணிக்கூட்டுக் கோபுரம் தாண்டித் தான்வழக்காடு மன்றம் இருக்கு. வழக்குக்குப் போக நேரத்தைப் பாத்தன் ஏழரை மணி காட்டிச்சு, ஒன்பது மணிக்குத்தான கோடெண்டுட்டு வேறலுவல்ல மினக்கட்டுட்டன். மணிக்கூடு பழுதுபட்டு நிண்டது எனக்குத் தெரியாது.

பின்ன என்ன பிந்திப்போய் குற்றம் கட்டினது தான் மிச்சம். இப்பிடி பொது இடங்களில வைக்கிற மணிக் கூடுகளில சம்பந்தப்பட்டவை உசாரா இருக்க வேணும் பாருங்கோ! அதால மற்றவர்களுக்கு பாதிப்புத்தான் இல்லையே! இப்ப பொருத்தி இருக்கிற எலக்றோனிக் மணிக்கூடு நிண்டால் ஒருநேரமும் தெரியாது. அது ஒண்டுக்கு நல்லது தான் ஆனா முகம் கறுத்த மூழி அலங் காரி மாதிரிக் கிடக் கிறதுதான் பிடிக்கிறேல்ல. பழைய மணிக் கூடு ஒரு வடிவுதான். அதுவுமில்லாமல் ஓடாமல் நிண்டாலும் ஒரு நாளில் இரண்டு வேளை சரியான நேரங்களைக் காட்டுமெல்லே... பின்னே!

## பனை வெல்லத் தொழிற்சாலை அமைக்கும் பணி ஆரம்பம்

(தெல்லிப்பழை)

தெல்லிப்பழை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் 72 லட்சத்து 67 ஆயிரம் ரூபா செலவில் தலைமைக் காரியாயலம் மற்றும் பனை வெல்ல உற்பத்தித் தொழிற்சாலை என்பவற்றுக்கான கட்டடங்களை அமைக்கும் பணியை ஆரம்பித்துள்ளதாக சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதில் சங்கத்தின் தலைமைச் செயலகத்திற்கு 45 லட்சத்து 67 ஆயிரம் ரூபாவும், பனை வெல்லத் தொழிற்சாலைக்கு 27 லட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இக்கட்டடங்களை அமைப்பதற்கான அனுமதியைக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வழங்கியதை அடுத்துக் கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## மீள் எழுச்சித் திட்டத்தின் கீழ் குளங்கள், வீதிகள் புனரமைப்பு

(வவுனியா)

நெடுங்கேணியில் நடைமுறைப்படுத்தப்படும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மீள் எழுச்சித் திட்டத்தின் கீழ் குளங்களும் விவசாய பயன்பாட்டுக்கு உரிய வீதிகளும் புனரமைக்கப்படும் என இந்த திட்டத்தின் வவுனியா மாவட்ட பொறியியலாளர் எஸ்.வினோதராஜ் தெரிவித்தார்.

வவுனியா வடக்குப் பிரிவு மேட்டு நிலப்பயிர்ச் செய்கைக்கு உகந்தது. மரக்கறிச் செய்கையுடன் கால்நடை வளர்ப்பும் நல்ல வருமானத்தைக் கொண்டதாகும்.

விவசாயிகள் முயற்சி எடுத்தால் விரைவில் முன்னேறலாம். அத்துடன் மாபெரும் விவசாய புரட்சியைக்கூட ஏற்படுத்தலாம். அந்தளவிற்கு இந்தப் பிரதேசம் வளங்கள் உள்ள பகுதியாகும். ஆனால் நாங்கள் தேவைப்படும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கலாம் என்றார். (39)

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(29.05.2011 – ஞாயிற்றுக்கிழமை)

### பஞ்சாங்கக் குறிப்புக்கள்

கர வருஷம்
வைகாசி 15 ஆம் நாள்.
இராகுகாலம் 4.22–5.52, சுபநேரம் 8.52 –10.22,
நட்சத்திரம் ரேவதி காலை 7.54 வரை
திதி: துவாதசி மு.இ. 11.39 வரை
அக்கினி நாள் முடிவு.

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

மேடம்:– பண வரவு, குடும்பத்தில் குதூகலம், நண்பர் வருகை, தேக சுகம், மன நிம்மதி.

ரிஷபம்:– குடும்பத்தில் குழப்பம், பணக் கஷ்டம், மனச் சஞ்சலம், வீண் பகை, அயலவர் நட்பு.

மிதுனம் :– மனமகிழ்ச்சி, பணம் வரும், குடும்பத்தில் அமைதி, களவுபோகலாம், கவனம் தேவை.

கடகம்:– பணக் கஷ்டம், மனக்கவலை, குடும்பத்தில் கலகம், விபத்து வர இடமுண்டு.

சிம்மம்:– குடும்பத்தில் மகிழ்ச்சி, பண வரவு, மன நிம்மதி, அயலவர் நட்பு, களவு நடக்கலாம்.

கன்னி :– பணக் கஷ்டம், வீட்டில் அமைதி, விபத்து வரலாம், தேக ஆரோக்கியம் குறைவு.

துலாம் :– குடும்பத்தில் குதூகலம், பணம் வரும், மனமகிழ்ச்சி, அயலவர் நட்பு, சபலம்.

விருச்சிகம்:– மன அமைதி, பண வரவு, குடும்பத்தில் மகிழ்ச்சி, களவு நடக்க இடமுண்டு, கவனம் தேவை.

தனுசு:– பணக் கஷ்டம், மனச் சஞ்சலம், வீண் அலைச்சல், திருடர் பயம், அயலவர் பகை.

மகரம்:– மனத்தில் குழப்பம், வீணான வாக்குவாதம், கவலை, பணக் கஷ்டம், சபலம்.

கும்பம் :– பண வரவு, வீட்டில் மகிழ்ச்சி, நண்பர் தொல்லை, அயலவர் நட்பு, விபத்து வர இடமுண்டு.

மீனம்:– வீட்டில் நிம்மதி, பணம் வரும், அயலவர் நட்பு, தேகசுகம் நலம், சபலம்.

## ரகசிய சந்திப்பால் ஏற்பட்ட பரபரப்பு

(மும்பை)

பாலிவுட் நடிகை பிரித்தி ஜிந்தா- பிரட் லீயை மும்பை விடுதியில் ரகசியமாக சந் தித்தது பெரும் பரபரப்பை ஏற் படுத்தியுள்ளது.

கொல்கத்தா அணியில் இடம் பெற்றுள்ள அவுஸ் ரேலிய வேகப்பந்து வீச் சாளர் பிரட் லீயையும் இவ் ரையும் இணைத்து செய்திகள் வெளியாகின. தாங்கள் நண் பர்கள் தான் என இவர்கள் தெரிவித்தனர்.

இந்நிலையில் மும்பையில் உள்ள ஆலிவ் விடுதிக்கு கடந்த 24ஆம் திகதி இரவில் பிரித்தி ஜிந்தாவும், பிரட் லீயும் வந்துள்ளனர். அங்கு சுமார் இரண்டு மணி நேரம் இருந்துள்ளனர். பிறகு கிளம்ப முற்பட்ட போது, விடுதிக்கு வெளியே பத்திரிகைப் புகைப்படக்காரர்கள் காத் திருப்பதாக, நிர்வாகிகள் எச் சரித்தனர். அவர்களிடம் இருந்து தப்பிக்கும் வகை யில், பிரட் லீ மட்டும் விடுதி யின் முன்வாசல் வழியாக சென்றுள்ளார். பிரித்தி ஜிந்தா வேக, வேகமாக பின்புற வாசல் வழியே சென்றுள் ளார்.

நாங்கள் நல்ல நண்பர் கள்தான் என்று தெரிவிக்கும் இவர்கள், ஏன் புகைப்படக் கார்களைக் கண்டு பயந்து ஓட வேண்டும். இதற்கான பதிலை, பிரித்தி ஜிந்தா, பிரட் லீ தான் தரவேண்டும் என பத்திரிகையாளர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

## முடிவிற்கு வருகிறது சீன ஆதிக்கம் சாய்னா நேவால் கூறுகிறார்

பட்மின்ரன் போட்டியில் சீனர்களின் ஆதிக்கம் மெதுவாக முடிவுக்கு வருகிறது என்று இந்திய பட்மின்ரன் வீராங்கனை சாய்னா நெவால் தெரிவித்துள்ளார்.

சுதிர்மான் கிண்ணப் போட்டியில் சீனாவின் வாங் ஜின்னை வீழ்த்திய பின்னர் கருத்துத் தெரிவிக்கும்போது அவர் மேற் கண்டவாறு தெரி வித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்த தாவது:

இப்போதைய சூழலில் எல்லா வீரர்களுமே நம்பிக்கையோடு விளையாடினால் அவர்களால் சீனர்களை தோற்கடிக்க முடியும் என்று நினைக்கிறேன். அதற்கான வாய்ப்பு இப்போது ஏற்பட்டுள்ளதாகக் கருதுகிறேன்.

ஆசிய மற்றும் ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த இளம் வீரர்கள் சமீபத்தில் சிறப்பாக ஆடி வெற்றி பெற்றது சீனர்களிடையே அச்சத்தை ஏற்படுத்தி யுள்ளது. ஏராளமான வீரர்கள் இப்போது சிறப் பாக விளையாடி வருவதால் சீனர் களிடையே சற்று பதற்றம் ஏற்பட் டுள் ளது.

எனவே அவர்கள் சற்று கவனமாக விளையாடு வாரகள் என்றார். சிறப்பாக ஆடி வெற்றிபெற்ற சாய்னாவுக்கு பாராட்டுத் தெரிவித்த சீனா வின் தலைமை பட்மிண்ரன் பயிற்சியாளர் லி யங்போ, வாங் ஜின் னுக்கு, சாய்னா கடுமையான சவால் அளித்தார். அவர் மிகவும் பலமான வீராங்கனை. மிகச்சிறப்பாக ஆடினார். மகளிர் ஒற்றையர் பிரிவில் வெளிநாட்டு வீராங்கனைகள் முன்பை விட இப்போது சிறப்பாக ஆடி வருகின்றனர் என்பதை ஒப்புக் கொள்கிறேன்.

இந்தியாவிலும் சிறந்த வீரர்கள் உள்ளனர். அவர்கள் அடுத்த நிலையை எட்ட முயற்சிக்கவேண்டும் என்றார்.

## மூன்றாவது சுற்றில் சானியா ஜோடி தகுதி

(பரீஸ்)

பிரெஞ் ஓபன் கிராண்ட்ஸ் லாம் டென்னிஸ் மகளிர் இரட்டையர் சுற்றுகளில் சானியா ஜோடி மற்றும் போபண்ணா-குரேசி ஜோடி மூன்றாவது சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளனர்.



சானியா மிர்சா - எலினா வெஸ்னீனா ஜோடி ஜெர்மனி, ஸ்வீடன் இணையான கிரிஸ்டினா பரோய்ஸ், லார்சன் இணையை 7- 6, 6- 3 என்ற செட்களில் வெற்றி பெற்று மூன்றாவது சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது.

தங்களது முதல் சுற்று ஆட்டத்தில் விளையாடிய போபண்ணா, குரேஷி இணை இத்தாலியின் ஆண்ட்ரியாஸ் செப்பி, சிமோன் வக்னோசி இணையை முதல் சுற்றில் வீழ்த்தினர்.

## பாகிஸ்தானில் விளையாட மாட்டேனென்ற டில்சானின் கருத்திற்கு கடும் எதிர்ப்பு

(லாகூர்)

நான் மீண்டும் பாகிஸ்தானில் விளையாட விரும்பவில்லை என இலங்கை கிரிக்கெட் அணி யின் தலைவர் திலகரட்ன டில் சான் கூறியமைக்கு பாகிஸ்தானி லிருந்து கடும் எதிர்ப்பு கிளம்பி யுள்ளது.

திலகரட்ன டில்சானின் கருத்து களை சாடிய பாகிஸ்தான் கிரிக் கெட் சபையின் முன்னாள் தலை வர் லெப். ஜெனரல் தாகிர் ஸியா, அணித்தலைவர் என்ற வகையில் இவ்வகையான கருத்துக்களை வெளியிடுவதை டில்சான் தவிர்த் துக்கொள்ள வேண்டும் எனக் கூறி யுள்ளார். இலங்கை கிரிக்கெட் துறைக்கு எப்போதும் பாகிஸ்தான் ஆதர வாக இருந்துவந்துள்ளது எனவும் தாகிர் ஸியா கூறினார்.

தாகிர் ஸியா 1999 முதல் 2004 ஆம் ஆண்டுவரை பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவராக பதவி வகித்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை பாகிஸ்தானின் புகழ் பெற்ற முன்னாள் வீரரான அப்துல் காதிரும் டில்சானை விமர்சித்துள் ளார். டில்சானின் கருத்து பொறுப் பற்றதாகும் எனக்கூறிய அப்துல் காதிர், இது கிரிக்கெட் விளை யாட்டுக்குப் பாதிப்பை ஏற்படுத்து வதால் இலங்கை கிரிக்கெட் சபை யும் ஐ.சி.சியும் இது குறித்து கவ னம் செலுத்த வேண்டும் எனக் கோரி யுள்ளார்.

## ருவென்ரி 20 அனுபவம் மே.தீவில் கைகொடுக்கும்

(புதுடில்லி)

இருபது ஓவர் உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் விளையாடிய அனுபவம் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான ஒருநாள் தொடரில் சிறப்பாக செயற்பட உதவும் என்று இந்திய வேகப்பந்து வீச்சாளர் வினய் குமார் நம்பிக்கை தெரிவித் துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டுக்காக விளையாடுவது மிகப்பெரிய கௌரவம். எனவே இந்த வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்தி இந்திய அணியின் வெற்றிக்கு மிகப்பெரிய பங்காற்றுவேன்.

ஏற்கெனவே மேற்கிந்தியத்தீவுகளில் நடைபெற்ற இருபது ஓவர் உலகக் கிண்ணத் தொடரில் விளையாடியுள்ளதால் அந்த அனுபவம் நிச்சயம் எனக்கு உதவும். அங்குள்ள சூழலுக்கு ஏற்ப எப்படி பந்துவீசுவது என்பதை நன்றாக புரிந்துகொண் டுள்ளேன். சிரேஷ்ட வீரரான சகீர்கான் அணியில் இடம்பெறாத நிலையில் எங்களுக்கு சவால்கள் அதிகம என்றார்.

இந்திய அணி மேற்கிந்தியத் தீவுகளுடன் ஒரு இருபது ஓவர் ஆட்டம், 5 ஒருநாள் ஆட்டங்கள், 3 டெஸ்ட் போட்டிகளில் விளையாடுகிறது. ஒருநாள் மற்றும் இருபது ஓவர் அணியில் வினய்குமார் இடம்பெற்றுள்ளார்.

இருபது ஓவர் ஆட்டம் ஜூன் 4இல் டிரினிடாட்டில் தொடங்கு கிறது. இந்திய அணி ஜூன் 1ஆம் திகதி மும்பையில் இருந்து மேற்கிந்தியத் தீவுகளுக்கு புறப்படும்.

## காயத்தை மறைக்கவில்லை மறுக்கிறார் கௌதம் கம்பீர்

(கொல்கொத்தா)

காயத்தை மறைத்து ஐ.பி.எல்., போட்டிகளில் பங்கேற்கவில்லை என இந்திய வீரர் கம்பீர் மறுப்பு தெரிவித்துள்ளார். உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் போது இந்திய வீரர் கம்பீர், வலது தோள்பட்டையில் காயம் அடைந்துள்ளார். இதை மறைத்து, பணத்துக்காக ஐ.பி.எல்., தொடரில் பங்கேற்றதால், மேற்கிந் தியத்தீவுகள் அணிக்கெதிரான தொடரில் பங்கேற்க முடியவில்லை என்று, கம்பீர் மீது குற்றம் சுமத்தப்பட்டது. இதற்கு கம்பிர் மறுப்பு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து கம்பீர் கூறியது: உலகக் கிண்ணத் தொடரின் இறுதிப் போட்டியில், ஓட்டங்கள் எடுக்க ஓடிய போது மட்டும்தான் சற்று வலி இருந்தது. இதை நான் பெரிதாக நினைக்கவில்லை. அனைத்து வித கிரிக்கெட்டிலும் விளையாடும் வீரர்களுக்கு, இது போன்ற சம்பவங்கள் சகஜம் தான். மற்றபடி மும்பைக்கு எதிரான ஐ.பி.எல்., லீக் போட்டியில், பந்தை த்ரோ செய்த போது தான், வலது தோள்பட்டையில் வலி ஏற்பட்டது. கிரிக் கெட் வீரருக்கு காயம் என் பது எவ் வளவு மோசமான விளைவை ஏற்படுத்தும் என்பது எல்லோருக்கும் தெரியும். இதனால், கிரிக்கெட் வாழ்க்கையே பாதிக்கப்படும். இந் நிலையில் காயத்தை மறைத்து ஐ.பி. எல்., தொடரில் மட்டும் பங் கேற்றேன் என்பது கற்பனை செய்து பார்க்க முடியாதது. எனது அணிக்கு நான் தேவைப்பட் டேன். மற்றபடி தேசத்தை விட, உள்ளூர் போட்டி களுக்கு முக்கியத் துவம் கொடுக் கின்றேன் என்றார்.

## வெளிப்படையான விசாரணை நடத்தப்படுமென அறிவிப்பு

சர்வதேச கால்பந்து சம்மேளனத்தின் (பி்.பா) தலைவர் செப் பிளேட்டர் மீது வெளிப்படை யான விசாரணை நடத்தப்படும் என அந்த அமைப்பு அறிவித்துள்ளது.

பி்.பா நீதிநெறிக் குழு முன்பு இன்று ஆஜராகுமாறு பிளேட்டருக்கு சம்மன் அனுப்பப் பட்டுள்ளது.

பி்.பா தலைவர் பதவிக்கான தேர்தலில் தன்னை எதிர்த்து போட்டியிடும் முகமது பின் ஹமாம் மீதான ஊழல் குற்றச்சாட்டு குறித்து பிளேட்டர் சில விவரங்களை தெரிவித்தார். இதை யடுத்து பிளேட்டரிடமும் விசாரணை நடத்த வேண்டும் என ஹமாம் கோரிக்கை விடுத்தார். அதன்பேரிலேயே அவருக்கு சம்மன் அனுப் பப்பட்டுள்ளது.

ஜூன் 1ஆம் திகதி பி்.பா தலைவர் பதவிக் கான தேர்தல் நடைபெறவுள்ளது. இந்த நிலையில் கடந்த 10, 11 ஆகிய திகதிகளில் டிரினிடாட்டில் நடைபெற்ற கூட்டத்தின்போது தேர்தலில் வாக்களிப்பதற்காக அந்நாட்டு கால்பந்து சங்கத்துக்கு ரூ.18 லட்சம் கொடுத்ததாக பின் ஹமாம், பி்.பா துணைத் தலைவர் வார்னர் ஆகியோர் மீது புகார் எழுந்தது.

இதையடுத்து அவர்களுக்கும், மேற்கிந்தியத் தீவுகள் கால்பந்து சங்க அதிகாரிகள் இரு வருக்கும் சம்மன் அனுப்பப்பட்டது. இந்த நிலை யில் இந்த குற்றச்சாட்டு தொடர்பாக கருத்துத் தெரிவித்த பிளேட்டர் முன்பணம் மட்டுமே இப்போது கொடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித் திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பிரெஞ் ஓப்பன் ரென்னிஸ் தொடர் கரோலின் வொஸ்னியாக்கி அவுட்



(பரிஸ்)

பிரெஞ் பகிரங்க ரென்னிஸ் தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவில் உலகின் முதல் நிலை வீராங்கனையான கரோலின் வோஸ்னியாக்கி வெளியேற்றப்பட்டுள்ளார்.

டென்மார்க்கை சேர்ந்த கரோலின் நேற்று முன்தினம் நடைபெற்ற 3ஆவது சுற்றுப் போட்டியில் ஸ்லோவாக்கிய வீராங்கனை டானியலா ஹன்டுசோவுடன் மோதினார். இப்போட்டியில் டானியெலா 6-1, 6-3 விகிதத்தில் வெற்றி பெற்றார்.

20 வயதான கரோலீன் வோஸ் னியாக்கி இதுவரை கிரான்ட்ஸ்லாம் ஒற்றையர் போட்டி கள் எதிலும் சம்பி யனாகவில்லை என் பது குறிப்பிடத்தக் கது. கிம் கிளிஸ்டர் ஸூம் வெளியேறியமை குறிப்பிடத்தக்கது.

# சென்னை சுப்பர் கிங்ஸ் இரண்டாவது முறையும் சாம்பியன்



(சென்னை)

முரளி விஜய், மைக் ஹசியின் அதிரடியில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி இரண்டாவது தடவையாகவும் சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்தது. ஐ.பி.எல் 2011 இறுதிப்போட்டி நேற்று சென்னை சுப்பர் கிங்ஸ் மற்றும் ரோயல் சலஞ்சர்ஸ் அணிகளுக்கு இடையில் நடைபெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற சென்னை சுப்பர் கிங்ஸ் துடுப்பெடுத்தாடியது. ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கிய மைக் ஹசி 63, முரளி விஜய் 95 ஓட்டங்களை பெற்றனர்.

இறுதியில் 20 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 205 ஓட்டங்களைப் பெற்றது. முரளி விஜய் சதம் அடிக்கவிருந்த நிலையில் அரவிந்தின் பந்திற்கு வெற்ரோறியிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

பதிலுக்கு 206 என்ற பிரமாண்ட வெற்றியிலக்கை நோக்கி களமிறங்கிய ரோயல் சலஞ்சர்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 147 ஓட்டங்களைப் பெற்று 58 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

துடுப்பாட்டத்தில் எஸ்.திவாரி மட்டும் 42 ஓட்டங்களைப் பெற்றார். இத் தொடரில் அதிக ஓட்டங்கள் பெற்ற அதிரடி ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் கெய்ல் ஓட்ட மெதுவும் பெறாமல் ஆட்டமிழந்தது ரோயல் சலஞ்சர்ஸ் அணிக்கு பலத்த ஏமாற்றத்தை அளித்தது.

பந்துவீச்சில் அஸ்வின் 3, பொலிஞ்சர் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இவ்வெற்றியுடன் தொடர்ச்சியாக இரண்டாவது முறையாக ஐ.பி.எல் தொடரில் சாம்பியன் பட்டத்தை சூடியது சென்னை சுப்பர் கிங்ஸ் அணி.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக முரளி விஜயும், தொடர் ஆட்டநாயகனாக ரோயல் சலஞ்சர்ஸ் அணியின் கிறிஸ் கெய்லும் தெரிவுசெய்யப்பட்டனர்.

# இங்கிலாந்து அணியில் இருவர் சதம்



(லண்டன்)

இலங்கைக்கும் இங்கிலாந்திற்கும் இடம்பெறுகின்ற ரெஸ்ட் போட்டியில் 3 ஆவது நாளான நேற்று இங்கிலாந்து முதலாவது இனிங்ஸில் குக் (129) ரோற் (125) ஆகியோரின் சதங்களுடன் ஆட்ட நேர முடிவில் 2 விக்கெட்டுக்களை இழந்து 287 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

விளையாட்டு செய்திகள்

# ஞானமுருகன் சம்பியன்

(யாழ்ப்பாணம்)

சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழகத்தின் 75ஆவது ஆண்டு முன்னிட்டு நடாத்திய கால்பந்துப் போட்டியில் ஞானமுருகன் அணி சம்பியானானது.

பாசையூர் சென்.அன்ரனீஸ் விளையாட்டுக் கழகத்தின் 75 ஆவது ஆண்டு விழாவினை முன்னிட்டு, கழகத்தின் சார்பில் யாழ்.மாவட்டத்தில் உள்ள விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்தப்பட்ட உதைபந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டம் கடந்த வியாழக்கிழமை பாசையூர் சென்.அன்ரனீஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் பிற்பகல் 4.45 மணிக்கு நடைபெற்றது. இந்த விளையாட்டு நிகழ்வை பாசையூர் புனித அந்தோனியார் ஆலயப் பங்குத் தந்தை றோய் பேடினன் அடிகளார் ஆரம்பித்து வைத்தார்.

இதில் உரும்பிராய் சென்.மைக்கல் அணியும், மயிலங்காடு ஞானமுருகன் அணியும் இறுதியாட்டத்துக்கு தகுதிபெற்றன.

முதலில் காட்சி உதை நடைபெற்றது. இதில் பாசையூர் சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழக அணியும், யாழ்.லீக்கின் நடுவர் சங்கமும் மோதிக் கொண்டன.

பின்பு உரும்பிராய் சென்.மைக்கல் அணியும், மயிலங்காடு ஞானமுருகன் அணியும் மோதின. இதில் மயிலங்காடு ஞானமுருகன் அணி 3-0 என்ற கோல் கணக்கில் சென். மைக்கல் அணியைத் தோற்கடித்தது.

# நான்கு பிரிவுகளில் நடைபெறும் சதுரங்கச் சுற்றுப் போட்டிகள்



இலங்கை பாடசாலைகளுக்காக சதுரங்க சங்கத்தால் 7, 9, 11, 13, 15 வய துப் பிரிவு ஆண், பெண் (தனி) இருபாலருக்குமான சதுரங்கச் சுற்றுப் போட்டி கடந்த வெள் ளிக்கிழமை ஆரம்பமாகியது.

நேற்று இரண்டாம் நாளாகவும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடைபெற்றது. பத்துப் பிரிவாக நடைபெறும் இப்போட்டியில் 187 மாணவ, மாணவிகள் பங்குபற்றினர். எனினும் 7, 9 வயதுப் பிரிவுகளுக்கான போட்டியாளர்கள் குறைவாகவே காணப்பட்டனர்.

முதல் தடவையாக யாழ்ப்பாணத்தில் நடத் தப்படும் இப்போட்டியில் தெரிவாகும் வீரர்கள் கொழும்பில் நடைபெறும் தேசிய மட்டப் போட்டி யில் பங்குபற்ற தகுதி பெறுவர். 17, 19, 21 வயதுப் பிரிவினர் நேரடியாகவே போட்டிகளில் பங்குபற்றுவார்கள். இப்போட்டிகளை நடத்துவதற்காக இலங்கை பாடசாலைகளுக்கான சதுரங்க சங்கச் செயலாளர் விமலவீர, சுற்றுப் போட்டிக்குப் பொறுப்பான அதிகாரி சரத் ஜெயசந்திர ஆகியோர் வருகை தந்துள்ளனர். பிரதம மத்தியஸ்தராக கா. ஆதவன்

# கிளிநொச்சி மாணவி முதலிடம்

வவுனியாவில் இடம்பெற்ற மாகாண மட்ட மரதன் ஓட்டப்போட்டியில் கிளிநொச்சி கிருஷ்ணபுரத்தைச் சேர்ந்த பெருமாள் விமலாதேவி (வயது 17) முதலாழிடத்தைப் பெற்றுக் கொண்டார். கிளிநொச்சி- பாரதிபுரம் மகாவித்தியாலய மாணவியான இவர் 42.235 கிலோ மீற்றர் தூரத்தை ஓடிக் கடந்தே இந்தச் சாதனையைப் புரிந்துள்ளார். கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெற்ற ஊர்கடந்தோடல் போட்டியிலும் முதலாமிடத்தை இவர் பெற்றமை குறிப்பிடத்தக்கது. மாகாண மட்டப் போட்டியில் முதலிடம் பெற்ற இவர், அடுத்த மாதம் நான்காம் திகதி இடம்பெறவுள்ள தேசிய மட்ட மரதன் ஓட்டப் போட்டியில் பங்குபற்றவுள்ளதாக மாவட்ட பயிற்றுவிப்பாளர் ந. முகுந்தன் தெரிவித்துள்ளார்.

# இருவர் பிடித்தனர் முதலிடம்



ரமேஷ்



கதிரவன்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண குத்துச் சண்டைப் போட்டியில் 70 - 75 கிலோ உடல் எடைப் பிரிவில் ரஞ்சிதநாதன் ரமேஸும், 52 கிலோ உடல் எடைப் பிரிவில் நாராஜணமூர்த்தி கதிரவனும் முதலிடத்தைப் பெற்றுக் கொண்டனர்.

அதேவேளை கடந்த 21ஆம் திகதி நடைபெற்ற யாழ். மாவட்ட கராத்தே கறுப்புப் பட்டி இடையிலான போட்டியில் ரஞ்சிதநாதன் ரமேஸ் 70 - 75 கிலோ உடல் எடைப் பிரிவில் 2ஆம் இடத்தையும் நாராஜணமூர்த்தி கதிரவன் 52 கிலோ உடல் எடைப் பிரிவில் 1ஆம் இடத்தையும் தட்டிக் கொண்டனர்.

இவர்களுடன் 60 கிலோ உடல் எடைப் பிரிவில் தோமஸ் செபஸ்தியன் ஜோசப் அமலதாஸ் 3ஆம் இடத்தைப் பெற்று வடமாகாண கராத்தே போட்டியில் பங்குபெறும் வாய்ப்பினைப் பெற்றுக் கொண்டார்.

இவர்கள் சோட்டோ கான் கழகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி இச்சுற்றுப் போட்டியில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# விளையாட்டுக்கழகத்திற்கான மைதானம் திறந்து வைப்பு

(யாழ்ப்பாணம்)

நவாலி சென் பீற்றர் விளையாட்டுக்கழகத்திற்கான மைதானம் திறந்து வைக்கப்பட்டது.

சென் பீற்றர் விளையாட்டுக்கழகம் நீண்ட காலமாக மைதானம் இன்றி விளையாடி வந்தது. இந்நிலையில், அந்த விளையாட்டுக்கழகத்திற்கான விளையாட்டு மைதானத்தை அண்மையில் நவாலி சென் பீற்றர் தேவாலய பங்குத் தந்தை வணக்கத்திற்குரிய ஜோதிநாதன் திறந்து வைத்தார்.

கடந்த ஐந்தாம் திகதி நடைபெற்ற இந்நிகழ்வின்போது காட்சிப்போட்டி ஒன்றும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

எமக்கான மைதானம் திறந்து வைக்கப்பட்டதையிட்டு மகிழ்ச்சியடைவதாகவும், இதன் மூலம் தொடர் பயிற்சிகளை மேற்கொள்ள முடியும் எனவும் சென் பீற்றர் விளையாட்டுக்கழக வீரர்கள் கருத்து வெளியிட்டனர். (20)



# மனித உரிமைமீறல் குறித்து விசாரிக்க பொருத்தமான பொறிமுறை அவசியம்

## Friday Forum அரசிற்கு தெரிவிப்பு

(கொழும்பு)

**சர்வதேச மனிதாபிமான சட்டங்களை மீறும் வகையில் வன்னிப் போரின்போது மேற்கொள்ளப்பட்ட மனிதவுரிமை மீறல்கள் குறித்து விசாரணைகளை மேற்கொள்வதற்குப் பொருத்தமான பொறி முறை ஒன்றை உருவாக்குமாறு Friday Forum என்னும் அமைப்பு அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுத்துள்ளதாக பி.பி.சி. சிங்கள செய்திச் சேவையான சந்தேசிய தெரிவித்துள்ளது.**



ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கைத் தூதுவராகப் பதவி வகித்த ஒருவர் தலைமை யின் கீழ், பல்லின புத்தி ஜீவிகளை உள்ளடக் கியுள்ள இவ்வமைப்பு, தமிழ் மக்களின் சுதந்திர மான நடமாட்டத்திற்கு தடையாகவுள்ள அவசர காலச் சட்டம் மற்றும் பயங்கரவாதச் சட்டங்கள் நீக்கப்படவேண்டும் எனவும் கோரிக்கை விடுத் துள்ளது.

அத்துடன் தடுப்புக்காவலில் வைக்கப்பட் டுள்ளவர்களின் பெயர் விபரங்களை அரசாங்கம் வெளியிடவேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபை நிபுணர்கள் குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட போர்க் குற்றச் சாட்டுக்கள் மற்றும் மனித வுரிமை மீறல்களை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள மறுத்துள்ள அதே வேளை, நிபுணர்கள் குழுவின் அறிக்கைக்கு எதிராக அமைச்சர் ஒருவரினால் கையெ ழுத்துவேட்டை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனால் நிய மிக்கப்பட்ட நிபுணர்கள் குழுவின் மூன்று பிரதிநிதித்துவம் பொய்யர்கள் என அரசாங்கத்தின் விளம்பரம் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் அரசாங்கத்தால் நியமிக்கப் பட்ட உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழு போர்க் குற் றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல் கள் தொடர்பில் விசாரணைகளை மேற் கொள்ளக்கூடிய ஆளுமையைக் கொண்டிருக்க வில்லை என இவ்வமைப்பு சுட்டிக்காட்டி யுள்ளது.

அத்துடன் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட விசா ரணைகள் சிறந்த பெறுபேறுகளைக் கொண்டி ருக்கவில்லை எனவும் இவ்வமைப்பு குறிப் பிட்டுள்ளது.

இக்குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் முகமாக போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் குறித்து விசாரணைகளை மேற்கொள் வதற்குப் பொருத்தமான பொறிமுறை ஒன்றை உருவாக்குமாறு Friday Forum, எனும் அமைப்பு அரசிற்கு அழுத்தம் கொடுத்துள்ள தாகவும் 'சந்தேசிய' மேலும் தெரிவித்துள் ளது.

# நெதர்லாந்து விசாரணையாளர்களிடம் கே.பி. சாட்சியமளிப்பது அவரது விருப்பம்

## என்கிறது சட்டமா திணைக்களம்

(கொழும்பு)

நெதர்லாந்திலிருந்து இலங்கை வரும் விசாரணையாளர்களிடம் கே.பி. உள்ளிட்ட புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் சாட்சி யம் வழங்குவதும் வழங்காத தும் அவர்களது விருப்பம் என்று சட்டமா அதிபர் திணைக் களம் தெரிவித்துள்ளது.

அரசின் தடுப்புக்காவலில் இருக்கும் கே.பி. உள்ளிட்ட முக்கிய புலி உறுப்பினர்கள் தொடர் பாக விசாரணை நடத்த நெதர்லாந்திற்கு கடந்த 20 ஆம் திகதி சட்டமாஅதிபர் திணைக் களம் அனுமதியளித்திருந் தது.

இந்நிலையில், இவர்கள் நெதர்லாந்து விசாரணையாளர் களுக்கு சாட்சியம் வழங்கு வதோ அல்லது வழங்காது விடுவது தொடர்பிலோ அரசு எவ்வித அழுத்தங்களையும் பிரயோகிக்கப் போவதில்லை என்று அறிவித்துள்ளது.

எனினும் நெதர்லாந்து விசா ரணையாளர்கள் இலங்கைக்கு வரவுள்ள திகதி குறித்து இது வரை அறிவிக்கப்பட வில்லை.

புலிகளின் சர்வதேச வலை யமைப்பு மற்றும் நிதிதிரட்டல் நடவடிக்கைகள் தொடர்பிலான தகவல்களைப் பெற்றுக் கொள் ளும் நோக்கில் நெதர்லாந்து விசாரணையாளர்கள் இலங்கை யில் உள்ள புலிகளின் முக்கிய உறுப்பினர்களிடம் விசாரணை நடத்தவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது

## திருமலை நீதிமன்றில் ஆஜரான பதுமன்

(கொழும்பு)

புலிகளின் திருகோணமலை மாவட்ட முன்னாள் கட்டளைத் தளபதி பதுமன் மீது திருகோணமலை மேல் நீதிமனறத்தில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் குற்றச்சாட்டுகள் சுமத்தப் பட்டுள்ளன.

பதுமன் என்று அழைக்கப்பட்ட சிவசுப்பிரமணியம் வரத நாதனை தீவிரவாத விசாரணைப் பிரிவு காவல்துறையினர் நேற்று திருகோணமலை மேல்நீதிமன்ற நீதிபதி தபகேந்திரன் முன்னிலையில் நிறுத்தியிருந்தனர். புலிகளின் திருகோணமலை மாவட்டக் கட்டளைத் தளபதியாக இருந்த இவர், இராணுவ முகாம்கள் மீது தாக்குதல் நடத்தியதாகவும், படையினரைக் கொன்ற தாகவும் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

# அடுத்துவரும் இரண்டு வாரங்களில் கொழும்பு - தூத்துக்குடி கப்பல் சேவை

(கொழும்பு)

கொழும்புக்கும் தூத்துக்குடிக்கு மிடையிலான பயணிகள் கப்பல் சேவை அடுத்துவரும் இரு வாரங்களில் ஆரம் பிக்கப்படும் என்று துறைமுகங்கள் கப்பல்துறை அமைச்சின் உயரதிகாரி யொருவர் தெரிவித்தார்.

இக்கப்பல் சேவையை ஆரம்பிப்பது தொடர்பான முக்கியமான பேச்சு வார்த்தை நாளை கொழும்பில் நடை பெறும். இப்பேச்சுவார்த்தையின் போது கப்பல் சேவையை ஆரம்பிப்பதற்கான தினமும் தீர்மானிக்கப்படலாம் எனவும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

இக்கப்பல் சேவைக்கென பிரயாண முகவர்களாக ஏழு கம்பனிகள் நியமிக் கப்பட்டுள்ளன.

இக்கம்பனிகளின் பிரதிநிதிகள் கப்பல் கூட்டுத்தாபனத்துடன் ஒப்பந்தங்களிலும் கைச்சார்த்திட்டுள்ளனர் எனவும் அவர் கூறினார்.

இக்கப்பல் சேவைக்கு பிரயாண முகவராக நியமிக்கப்பட்டிருக்கும் அறு கம்பை வரையறுக்கப்பட்ட ரவல்ஸ் அன்ட் டுவர்ஸ் கம்பனியின் முகா மைத்துவப் பணிப்பாளர் ஏ.எம். ஜவ்பர் குறிப்பிடுகையில், கொழும்புக்கும், தூத்துக்குடிக்குமிடையிலான பயணிகள் கப்பல் சேவையில் பிலிம்கோ லைனர் Flemingo Liner என்ற கப்பலே ஈடு படவுள்ளது. இக்கப்பலில் ஒரே தடவை யில் 1044 பேர் பயணம் செய்ய முடியும்.

இக்கப்பல் கம்பனியின் பிரதம நிர்வாக அதிகாரி தம்பையா, சந்தைப் படுத்தல் முகாமையாளர் நந்தினி சீனிவாசன், பொது முகாமையாளர் மென்ரா சாஸ்திர பூதி ஆகியோர் பயணி சேவையில் ஈடுபடும் கப்பல் தொடர்பாக எமக்கு முழுமையாக தெளிவுபடுத்தினர் என அவர் மேலும் தெரிவித்தார்.

# பொதுவான சவால்களை எதிர்கொள்ள அணிசேரா நாடுகள் முன்வரவேண்டும்

## அமைச்சர் பீரிஸ் அழைப்பு



(கொழும்பு)

அணிசேரா நாடுகள் பொதுவான சவால்களை கூட்டாக எதிர்கொள்ள வேண்டும் என வெளி விவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித் துள்ளார்.

அணிசேரா நாடுகளின் 16 ஆம் வெளிவிவகார அமைச்சர்கள் மாநாட்டில் உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக பயங்கரவாத ஒழிப்பு உள்ளிட்ட பொதுவான சவால்களை எதிர்கொள்வதில் அணி சேரா நாடுகள் உலக அரங்கில் முக்கிய பங்க ளிப்பை வழங்க முடியும் என அவர் தெரிவித் துள்ளார்.

இதேவேளை, ஐக்கிய நாடுகள் நிபுணர் குழு அறிக்கை தொடர்பில் அணி சேரா நாடுகள் அமைப்பின் உறுப்பு நாடுகளுக்கு வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் விளக்கமளித்துள்ளார்.

இலங்கையில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்திப் பணிகள் தொடர்பிலும் அமைச்சர் தலைமையிலான பிரதிநிதிகள் குழுவினர் விளக்க மளித்துள்ளனர்.

# தாய் நாட்டை மீட்டெடுத்த படையினரை தனிமைப்படுத்துவதற்கு அனுமதியோம்

## சஜித் பிரேமதாச எம்.பி

(கொழும்பு)

தாய்நாட்டை மீட்டெடுத்த எமது இராணுவ வீரர்களை எந்தச் சந்தர்ப்பத்திலும் எந்தக் காரணத்திற்காகவும் தனிமைப் படுத்த விடப் போவதில்லை எனத் தெரிவித்த ஐக்கிய தேசி யக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச எம். பி, நாட் டுக்கும் இராணுவ வீரரகளுக்கும் எழுந்துள்ள அந்நிய சக்திகளின் அழுத்தங்களைத் தோற்கடிக்க ஐ. தே. க. முன்னிற்கும் என்றும் கூறினார். முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா சிறைப் படுத்தப்பட்டுள்ள வெலிக்கடை சிறைச்சாலைக்கு நேற்று முன் தினம் ஐக்கிய தேசியக் கட்சி யின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாசவுடன் எம். பிக்களான சுஜீவ சேனசிங்க, தலதா அத் துக் கோரள மற்றும் தினேஷ் சங்கந்த ஆகியோர் சென்றி ருந்தனர். இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளி யிடுகையிலேயே சஜித் பிரேம தாச எம். பி. மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்,

சிறைப்படுத்தப்பட்டுள்ள முன னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா நிபந்தனைக ளற்ற வகையில் விடுதலை செய யப்பட வேண்டும் என்பதுடன், நாட்டைக் கட்டியெழுப்பும்



அபிவிருத்திப் பயணத்தில் அவ ரையும் ஒரு பங்கு தாரராக இணைத்துக்கொள்ள அரசாங் கம் நடவடிக்கை எடுக்க வேண் டுமெனத் தயவாக கேட்டுக் கொள வதாகவும் அவர் தெரிவித்தார்.

# போலி வெளிநாட்டு நிறுவனங்களை சுற்றி வளைப்பதற்குத் தீர்மானம்

(கொழும்பு)

போலியான ஆவணங்களை பயன்படுத்தி வெளிநாடுகளுக்கு பணிப் பெண்களை அனுப்பும் போலி நிறுவனங்களை சுற்றி வளைக்கும் நடவடிக்கை ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளதாக வெளி நாட்டு வேலைவாய்ப்புப் பணி மனையகம் தெரிவித்துள் ளது.

இவ்வாறு போலியான ஆவ ணங்களை பயன்படுத்தி வெளி நாடு செல்ல முற்பட்ட இரண்டு பெண்கள், நேற்றுமுன்தினம் கட்டுநாயக்கா விமான நிலை யத்தில் வைத்து கைது செய்யப் பட்டனர்.

இதனைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளதாக, பணிமனையின் தலைவர் கிங்ஸிலி ரணவக்க தெரிவித்துள்ளார்.

அந்தப் பெண்கள் இருவரும் சவுதி அரேபியாவுக்கு வீட்டுப் பணிப்பெண்களாக செல்ல முற்பட்டனர். குறித்த பெண்களை வெளி நாட்டுக்கு அனுப்ப போலியான ஆவணங்களை தயார் செய்த நிறுவனம் சுற்றி வளைக்கப் பட்டு, சந்தேகத்தின் பேரில் இரு வர் கைது செய்யப்பட்டுள்ள னர்.

இந்த நிறுவனமானது இதற்கு முன்னரும் இவ்வாறு போலி ஆவணங்களைத் தயார் செய்து பணிப்பெண்களை வெளி நாட் டுக்கு அனுப்பியுள்ளமை விசார ணைகளிலிருந்து தெரியவந் துள்ளது எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# போரில் முக்கிய பங்குவகித்த படை அதிகாரிகள் வெற்றிவிழா நிகழ்விற்கு அழைக்கப்படவில்லை

## என்கிறது கொழும்பு ஊடகம்

(கொழும்பு)

**இலங்கையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற போர்வெற்றிவிழா அணி வகுப்பில், புலிகளுக்கு எதிரான போரில் முக்கிய பங்கு வகித்த பல படை அதிகாரிகளுக்கு அழைப்புக் கூட விடுக்கப்படாமல் புறக்கணிப்பட்டதாக கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.**

நந்திக்கடல் பகுதியில் இடம்பெற்ற இறுதிக்கட்ட நடவடிக்கைகளில் முக்கிய பங்கு வகித்த சிறப்புப் படைப் பிரிவுக்குத் தலைமை தாங்கிய பிரிகேடியர் அதுல கொடிப்பிலி மற்றும் கொமாண்டோ படைப்பிரிவின் தளபதியாக இருந்த பிரிகேடியர் ரால்ப் நுகேரா ஆகியோர் இந்த நிகழ்வுக்கு அழைக்கப் படாமல் வெட்டி விடப்பட்டுள்ளனர்.

அத்துடன் வன்னிப் போரில் பங்கெடுத்த 55-1, 55-2, 55-3, 55-4, 57-2, 57-3, 58-1, 58-2, 58-3 ஆகிய பிரிகேட்களின் கட்டளை அதிகாரிகளும், அதிரடிப்படைப்பிரிவுகள் 3, 5, 6 ஆகியவற்றின் தளபதிகளும் இந்த வெற்றிவிழா நிகழ்வில் புறக்கணிக்கப் பட்டுள்ளனர்.

அதிரடிப்படைப்பிரிவு 2 இன் தளபதி பிரிகேடியர் றோகண பண்டார, அதிரடிப்படைப்பிரிவு 4 இன் தளபதி பிரிகேடியர் நிசாந்த வன்னியாராச்சி ஆகியோர் மட்டுமே இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

அதைவிட கால்களை இழந்த, நடக்க முடியதாத நிலையில் உள்ள - போரில் காயமடைந்த படையினர், இந்த அணி வகுப்புக்காக அதிகாலை 5 மணிக்கே அழைத்து வரப்பட்டிருந்தனர்.

படுக்கையில் ஓய்வெடுக்க வேண்டிய நிலையில் இருந்தவர்கள் கூட சக்கர நாற்காலிகளில் அழைத்து வரப்பட்டு 11.30 மணி வரை அலைக்கழிக்கப் பட்டனர்.

அவர்களுக்கு எந்தச் சிறப்பு வசதிகளும் செய்து கொடுக்கப்படாமல் துன்புறுத்தப்பட்டதாகவும் கொழும்பு ஊடகம் தகவல் வெளியிட்டுள்ளது.

## மோசடியான மலேஷியப் பயணம் தடுத்து நிறுத்த நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கைப் பணியாளர்கள் மோசடியான முறையில் மலேசியாவிற்கு அனுப்பி வைக்கப்படுவதனை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மோசடியான முறையில் இலங்கைப் பணியாளர்கள் அனுப்பி வைக்கப்படுவதனைத் தடுப்பதற்காக இரு நாடுகளுக்கும் இடையில் இணக்கப்பாடு ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளது.

சட்டவிரோதமான முறையில் பெருமளவிலான இலங்கையர்கள் மலேசியாவிற்கு செல்வதனால் பல்வேறு பிரச்சினைகள் எழுந்துள்ளதாகக் குறிப்பிடப் படுகிறது.

மலேசியாவிற்கான இலங்கைத் தூதுவராலய அதிகாரிகள் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியக அதிகாரிகள் கூட்டாக இணைந்து மலேசிய அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

இலங்கையர்களுக்கு மலேசிய வீசா வழங்கப்பட வேண்டுமாயின் குறித்த நபர்கள் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தில் பயிற்சி பெற்றிருக்க வேண்டும் என்பது கட்டாயப்படுத்தப் பட்டுள்ளது.

## வரட்சிக் காலநிலையை எதிர்கொள்ள அரசாங்கம் தயாராகி வருகின்றது



(கொழும்பு)

பாரியதொரு வரட்சிக் காலநிலையை எதிர்காலத்தில் நாடு எதிர்நோக்கவுள்ளது. அதனை எதிர்கொள்வதற்கான நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

புத்தளம் மாவட்டத்தில் உள்ள விவசாய அமைப்புக்களுக்கு நீர் விநியோக இயந்திரங்களை கையளிக்கும் நிகழ்வு இடம்பெற்றது. இதன்போதுஇ சுமார் 18 இலட்சம் பெறுமதியான 13 நீர் விநியோக இயந்திரங்களை அமைச்சர் வழங்கி வைத்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், அனர்த்தங்கள் ஏற்பட்டதன் பின்னர் உதவி செய்வதற்காக மட்டுமே அனர்த்த முகாமைத்துவ அமைச்சு நடவடிக்கை எடுக்காது. இயற்கை அனர்த்தங்கள் ஏற்படுவதற்கு முன்னரே அவை குறித்து மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களுக்கு தேவையான வசதி வாய்ப்புக்களை வழங்கவே அமைச்சு செயற்படுகிறது என்றும் தெரிவித்துள்ளார்.

## பொன்சேகா சிறையில் வாடும் நிலையில் வெற்றிவிழா நடத்துவதில் அர்த்தமில்லை

### ரவி கருணாநாயக்க எம்.பி .கூறுகிறார்



(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா சிறையில் வாடும் நிலையில் நடத்தும் போர் வெற்றிக் கொண்டாட்டங்களில் அர்த்தமில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

குமரன் பத்மநாதன் போன்றவர்கள் சுதந்திரமாக சுற்றித் திரியும் சந்தர்ப்பத்தில் பயங்கரவாதிகளுக்கு எதிரான போராட்டத்தை வெற்றி கொண்ட சரத் பொன்சேகா சிறையில் அடைக்கப் பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு உண்மையான போர் வெற்றி வீரர் சிறையில் அடைக்கப்பட்டு, கொண்டாடப்படும் வெற்றிக் கொண்டாட்டங்களில் அர்த்தமில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத செயற்பாடுகளில் ஈடுபட்டவர்களுக்கு ஒரு நியாயமும், பயங்கரவாதத்தை இல்லாதொழித்தவர்களுக்கு இன்னொரு நியாயமும் நாட்டில் அமுல்படுத்தப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான ஓர் நிலையில் ஜனநாயகம் மற்றும் நீதி பற்றி எவ்வாறு பேசுவது என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

## பேருந்து கட்டண அதிகரிப்பு; இறுதித்தீர்மானம் விரைவில்

(கொழும்பு)

பேருந்து கட்டண அதிகரிப்பு தொடர்பில்,தேசிய போக்குவரத்து ஆணைக்குழு மற்றும் போக்குவரத்து அமைச்சு என்பன இதுவரையில் எந்தவிதமான பதிலையும் வழங்கவில்லை என தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தனியார் பேருந்து உரிமையாளர்களின் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ண இது தொடர்பில் தெரிவிக்கையில்,

பேருந்துக் கட்டண அதிகரிப்பு தொடரபில் எமது சங்கத்தால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவும் போக்குவரத்து அமைச்சும் உரிய பதிலை வழங்கும் எனக் குறிப்பிட்டிருந்தன.



எனினும் அது தொடர்பில் இதுவரையிலும் எந்தவிதமான அறிவிப்புக்களும் வெளியிடப்படவில்லை

இந்த நிலையில், எதிர்வரும் ஜூன் மாதம் 2 ஆம் திகதி இது தொடர்பில் இறுதி தீர்மானம் மேற்கொள்ளப்படவுள்ளது எனத் தெரிவித்தார்.

## போதைப் பொருள் கடத்திய பௌத்தபிக்கு மாட்டினார்


(கொழும்பு)

போதைப் பொருள் கட்டத்தலில் ஈடுபட்ட பௌத்த பிக்கு ஒருவரை பொலிஸா கைது செய்துள்ளதாகவும்,

காவி உடையில் இந்தப் போதைப் பொருள் பக்கட்டுக்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாகவும் சிங்கள ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

பன்னிப்பிட்டிய பிரதேசத்தில் குறித்த பௌத்த பிக்கு கைது செய்யப் பட்டதாகவும்,மஹரகம பொலிஸார் நடத்திய தேடுதலின் போது இவர் கைது செய்யப் பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த பௌத்த பிக்கு கொழும்பிற்கு அருகாமையில் உள்ள பாடசாலை ஒன்றின் ஆசிரியராகவும் கடமையாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. மஹரகம பிரதேசத்தைச் சேர்ந்த பிரதேச போதைப் பொருள் வர்த்தகர் ஒருவரிடம், தாம் இந்தப் போதைப் பொருள் பக்கட்டுக்களைக் கொள்வனவு செய்ததாக குறித்த பௌத்த பிக்கு தெரிவித்துள்ளார்



**திருமுறிகண்டியிலிருந்து அக்கராயன் செல்லும் பிரதான வீதிக்கு அருகில் கிறவல் மண் ஏற்றப்படும் பகுதியே இதுவாகும். சுற்றுச்சூழல் தொடர்பான எவ்வித அக்கறையுமின்றி காட்டுப் பகுதிகளிலுள்ள மரங்களும் அடியோடு பெயர்த்தெடுக்கப்பட்டு கிறவல் மண் இப்பகுதியிலிருந்து ஏற்றப்படுகிறது. இந்த மண் ஏற்றும் பகுதிக்கு பின்பக்கமாக அக்கராயன் குளம் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (29)**

# வடமாகாண சுகாதாரத் தேவைகள் குறித்து ஆளுநர் தலைமையில் கலந்துரையாடல்



(கிளிநொச்சி)

வடமாகாணத்தில் சுகாதாரத் துறையின் முன்னேற்றம் மற்றும் அத்துறைக்கான தேவைகள் குறித்து ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தலைமையில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றுள்ளது.

கிளிநொச்சியில் உள்ள ஆளுநரின் உப அலுவலகத்தில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், மாவட்ட வைத்தியசாலைகளின் பணிப்பாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

வடமாகாணத்தில் சுகாதாரத் துறையின் நிர்வாகத்தை மேம்படுத்த வெற்றிடமாகவுள்ள பதவிகளுக்குப் பொருத்தமானவர்களை நியமிக்க வேண்டும். இதிலும், மக்கள் மீள்குடியமர்ந்துள்ள கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டுமெனக் கலந்துரையாடலில் பங்குபற்றியவர்கள் வலியுறுத்தினர்.

இவர்களின் கருத்தைக் கேட்டறிந்த ஆளுநர், சகலவற்றையும தீர்ப்பதாக உறுதியளித்ததுடன், மீளகுடியேற்றப்பட்ட இடங்களின் சுகாதாரத் தேவைகளுக்கு முன்னுரிமை அளிப்பதாகவும் தெரிவித்தார்.

# மக்கள் குடியிருக்காத வீடுகளில் வேண்டத்தகாத சம்பவங்கள்

## தீவகப் பகுதிகளில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தின் தீவகப் பிரதேசங்களில் மக்கள் குடியிருக்காத பாழடைந்த வீடுகளில் வேண்டத்தகாத சம்பவங்கள் இடம்பெற்று வருவதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

குறித்த சில பிரதேசங்களிலுள்ள குடியிருப்புக்களில் மக்கள் குடியேறாத நிலையிலுள்ளனர். சில குடியிருப்பின் உரிமையாளர்கள் கடந்தகால போர் நடவடிக்கை காரணமாக, வெளிநாடுகளுக்குச் சென்று விட்டனர்.

இவ்வாறான குடியிருப்புகளிலேயே அண்மைக்காலமாக வேண்டத் தகாத சம்பவங்கள் இடம்பெற்று வருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே குடியிருப்புகள் இல்லாத வீட்டு உரிமையாளர்கள் தமது வீட்டில் யாரையாவது குடியிருத்த வேண்டும். அல்லது வீடில்லாமல் அல்லல்படுபவர்களுக்கு அதனை வழங்கி, இவ்வாறான வேண்டத்தகாத சம்பவங்கள் இடம்பெறுவதைத் தடுக்க வேண்டுமெனவும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

# கோட்டையின் நிர்மாணப் பணிகள் குறித்து யாழ். பொதுநூலகத்தில் பயிற்சிப்பட்டறை



(யாழ்ப்பாணம்)

நெதர்லாந்து அரசின் உதவியுடன், புனரமைக்கப்பட்டு வரும், கோட்டையின் நிர்மாணப் பணிகளின் முன்னேற்றம் தொடர்பாக ஆராயும் கூட்டமும் பயிற்சிப் பட்டறையும் கடந்த வியாழக்கிழமை யாழ். பொதுநூலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

தேசிய மரபுரிமைகள் அமைச்சின் செயலாளர் திருமதி ஹந்தி விஜேதுங்க தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத்துறைப் பேராசிரியர் புஸ்பராசா, மொரட்டுவ பல்கலைக்கழக வரலாற்றுத்துறைப் பேராசிரியர் மானவடு, சிரேஷ்ட தொலலியல் ஆய்வாளரும், கோட்டையின் புனரமைப்புப் பணிப்பாளருமான மண்டவல, மரபுரிமைகள் குறித்த சிரேஷ்ட அதிகாரி திருமதி இன் அன்தோனிற்றிலீ கல்றி, நெதர்லாந்துத் தூதரகத்தைச் சேர்ந்த இர் ஒக்கோ குளுஸ்ரர் மற்றும் யாழ்மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிநத ஹத்துருசிங்க, யாழ், மொரட்டுவப் பல்கலைக்கழக வரலாற்றுதுறை மாணவர்கள், யாழ்மாநகர சபை அதிகாரிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட தளபதி ஹத்துருசிங்க உரையாற்றுகையில், கோட்டைப புனரமைப்பிற்கு நிதியுதவி அளித்துவரும் நெதர்லாந்து அரசிற்கு நன்றி தெரிவித்தார்.

இந்தப் பயிற்சிப் பட்டறையில் கலந்து கொண்டவர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன.

# அடிக்கடி தடைப்படும் மின்சாரம்; பல்வேறு தரப்பினரும் பாதிப்பு

(மானிப்பாய்)

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் கடந்த சில நாட்களாக இரவு நேரங்களில் அடிக்கடி மின்தடை ஏற்படுகின்றது. மானிப்பாய், சண்டிலிப்பாய், கட்டுடைப் பகுதிகளில் இரவு நேரங்களில் பல தடவை மின் தடை ஏற்படுகின்றது.

திடீரென மின்தடைப்படுவதால் இலத்திரனியல் உபகரணப் பாவனையாளர்கள் பெரிதும் சிரமப்படுகின்றனர். மின் ஒளியின்மையால் வீதிகளில் செல்பவர்கள் விபத்துகளைச் சந்தித்து வருகின்றனர். மாணவர்கள் கல்வி கற்பதற்கு இது தடையாக அமைகின்றது. (கா)

# இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினராக சுபாகர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்

(சண்டிலிப்பாய்)

வலி.தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவின் இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினராக பே.சுபாகர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இத்தேர்தலில் 3 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். சுபாகர் 104 வாக்குகளுடன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். கடந்த நவம்பர் மாதம் நடைபெற்ற தேர்தலில் எஸ்.ஜெபநேசன் தெரிவு செய்யப்பட்டார். இவர் எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தலில் மானிப்பாய் பிரதேச சபைக்கான வேட்பாளராகப் போட்டியிடவுள்ளார். இதனால் இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் தேர்தல் மீண்டும் நடத்தப்பட்டது. (கா)

# கடமை நேரங்களில் சேவையை வழங்க கிராம சேவகர்கள் மறப்பதால் மக்கள் அவதி

(யாழ்ப்பாணம்)

வலி.தென்மேற்குப் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பிரிவில் கடமையாற்றும் சில கிராம சேவகர்கள் சீரான முறையில் கடமையாற்றுவதில்லை என அபபகுதி மக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

கிராம சேவகர்கள் வாரத்தில் காலை 8.30 மணி முதல் முற்பகல் 11 மணி வரை அலுவலகக் கடமையாற்ற வேண்டும். அதன் பின் வெளிக்கள சேவையாற்ற முடியும். ஆனால் கடமையின் தன்மையைப் பொறுத்து நேர தாமதங்கள் ஏற்படலாம்.

ஆனால் சில கிராம சேவகர்கள் நண்பகல் 11 மணியளவிலேயே கடமைக்குச் சமுகமளிப்பதை வழமையாகக் கொண்டுளளனர்.

இதனால் நேர்முகத் தேர்வு உள்ளிட்ட பல தேவைகளுக்காக அத்தாட்சிப் பத்திரங்களைப் பெறறுக்கொள்ள முடியாதநிலை ஏற்பட்டுள்ளது. இங்கு பெற்ற ஆவணங்களுடன் திணைக்களங்களுக்குச் சேவை பெறுவதற்கு முடியாதுள்ளது.

வேறு சில கிராம அலுவலர்கள் தமது கடமை நேரத்தில் அலுவலகத்தில் பணியாற்றுகின்ற போதும், குறித்த சேவையைப் பெறுவதற்கு வருபவர்களை பல காரணங்கள் கூறி காலம் தாழ்த்துவதாகவும், இதனால் உரிய நேரதில் சேவையைப் பெற்றுகொள்ள முடியாதுள்ளதாகவும் மக்கள் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

தமது கடமைநேர அட்டவணையை அருகில் காட்சிப்படுத்தியிருக்கும் கிராம சேவகர்கள் அந்த நேரத்தில் சேவை புரிவதில் அசமந்தப் போக்கினைக் கடைப்பிடிக்கின்றனர். நேர்மையாக சிறப்பான சேவை வழங்கும் கிராம சேவகர்களும் இவர்கள் போன்ற ஒரு சிலரால் அவப்பெயர் ஏற்பட வாய்ப்புள்ளதெனவும் பொது மக்கள் தெரிவிக்கினறனர்.

# கொலை செய்யப்பட்ட பெண்ணுக்கு சவூதி அரசு வழுங்கியது நட்ட ஈடு

(கொழும்பு)

சவூதியில் படுகொலை செய்யப்பட்ட இலங்கை தமிழ் பணிப்பெண்ணின் குடும்பத்துக்கு, 40 ஆயிரம் சவூதிய ரியால்கள் நட்ட ஈடாக வழங்கப்பட்டுள்ளதாக சவூதியில் உள்ள இலங்கைத் தூதரகம் தெரிவித்துள்ளது.

"த அரப் நிவ்ஸ்" இணையத்தளம் இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது.

இலங்கையில் இருந்து சவூதி அரேபியாவின் அபா பிராந்தியத்தில் பணயாற்றிய புஸ்பவள்ளி செல்லத்துரை என்பரே அண்மையில் அவரது தொழில் வழங்குனராலேயே படுகொலை செய்யப்பட்டார்.

மரணத்தின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் அவர் கொலை செய்யப்பட்டமை ஊர்ஜிதமானது.

இதனை அடுத்து அவரைக் கொலை செய்தவர் என்ற குற்றச்சாட்டின் கீழ் அவரது எஜமானி கைது செய்யப்பட்டுத் தொடர்ந்தும் சிறையில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் நட்ட ஈடாக வழங்க ஒப்பு கொள்ளப்பட்ட தொகை வழங்கப்பட்டதன் பின்னர், குறித்த கொலையாளி விடுவிக்கப்படுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சவூதிய சட்டத்தின் படி இந்த நடைமுறை பின்பற்றப்படுகிறது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த கொலை செய்யப்பட்ட பெண்ணின் சகோதரி சரோஜா செல்லத்துரை, குறித்த நட்ட ஈட்டுத் தொகையை புஸ்பவள்ளியின் நான்கு பிள்ளைகளின் செலவினங்களுக்காகப் பயன்படுத்தவிருப்பதாகத் தெரிவித்தார்.

# இனந்தெரியாத நோய்த்தாக்கத்தால் மண்டைதீவில் மரணமாகும் மாடுகள்



(யாழ்ப்பாணம்)

மண்டைதீவுப் பிரதேசத்தில் சில மாதஙகளுக்கு முன்னர் திடீர் திடீரென வளர்பபு மாடுகள் மற்றும் கட்டாக்காலி மாடுகள் உயிரிழந்தன. இது தொடர்பில் வேலணை கால்நடை வைத்தியசாலைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் இவ் உயிரிழப்புக்கள் கடந்த காலங்களில் குறைவடைந்திருந்த போதும், அது தற்போது அதிகரித்துள்ளது. எனவே இது தொடர்பில் வேலணை கால்நடை வைத்தியசாலை நிர்வாகம் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இனந்தெரியாத நோய்த்தாக்கத்தின் காரணமாகவே இம்மாடுகள் உயிரிழப்பதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



**அல்லைப்பிட்டியில் அமைக்கப்பட்டு வரும் ஆரம்ப சுகாதார நிலைபத்தின் நிர்மாணப்பணிகள் நிறைவடையும் நிலையில் உள்ளதனைக் காணலாம்.**

**அடுத்த மாதம் இதன் திறப்பு விழா இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.**

# நாய்க்குட்டியை ஈன்ற ஆடு

நாளுக்கு நாள் நாம் நம்ப மறுக்கும் பல்வேறு விசித்திரங்கள் உலகில் எங்கோ ஓர் மூலையில் நடந்து கொண்டுதான் இருக்கிறது. இந்த வரிசையில் சீனாவில் உள்ள பண்ணை ஒன்றில் ஆடு ஒன்று நாய்க் குட்டி ஒன்றை பிரசவித்து உள்ளது. மிருக வைத்திய நிபுணர்கள் தம் கண்களையே நம்ப மறுக்கின்றனர்.



ஆட்டுக்குப் பிறந்த குட்டியின் வாய், மூக்கு,கண்கள்,வால் போன்ற உறுப்புக்கள் நாய் ஒன்றுக்கு உரியனவே என்றும் நாய்க்குட்டி ஒன்றைப் போலவே இக்குட்டியின் விளையாட்டுக்கள், குறும்புகள் உள்ளன என்றும் பண்ணை உரிமையாளர் அதிசயிக்கிறார். ஆனால் ஆடுகளின் உரோமத்தை இக் குட்டி கொண்டு உள்ளது.

# மரநாய் எச்சத்தில் கோப்பி



உலகில் அதிகமானோரால் விரும்பிப்பருகப்படும் பானமாக திகழ்வது கோப்பியாகும். இவ்வாறு விரும்பி அருந்தப்படும் கோப்பி வகைகளில் பல வகைகள் உண்டு.

எனினும் உலகில் விலையுயர்ந்த கோப்பி வகை எதுவென்று உங்களுக்கு தெரியுமா?

அது எவ்வாறு தயாரிக்கப்படுகின்றது என்பது உங்களுக்கு தெரியுமா? அத்தகவல் சற்று சுவாரஸ்யமானது.

இவ்வகை கோப்பியின் பெயர் "கோபி லுவாக்" Kopi Luwak.

இவை இந்தோனேசியாவின் சுமாத்ரா, பாலி, ஜாவா மற்றும் சுலாவெசி தீவுகளிலேயே உற்பத்தி செய்யப்படுகின்றன. ஆனால் இது கோப்பிச் செடிகளிலிருந்து நேரடியாக பெறப்படும் தானிய வகை அல்ல. கேட்டால் நீங்கள் அருவருப்படையக்கூடும். இக்கோப்பியானது ஆசிய மரநாய் எனப்படும் புழுகுப்பூனைக்குடும்பத்தைச்சேர்ந்த விலங்கின் கழிவிலிருந்து பெறப்பட்ட கோப்பிக்கொட்டைகளில் இருந்தே தயாரிக்கப்படுகின்றது. இவ்விலங்குகளுக்கு பழுத்த கோப்பிக்கொட்டைகள் உணவாக வழங்கப்படுகின்றன. வழங்கப்பட்ட அக்கோப்பிக் கொட்டைகள் இவ்விலங்குகளின் வயிற்றில் செரிமானம் ஆகாமல் கழிவாக வெளியேறுகின்றன.


இவ்வாறு கழிவுகளாக வெளியாகிய கோப்பிக்கொட்டைகள் கழுவி சுத்தப்படுத்தப்பட்டு வறுக்கப்பட்டு பின்னர் கோப்பித்தூளாக மாற்றப்படுகின்றது. இக்கோப்பிக்கென வெளிநாட்டில் அதிக கேள்வியுள்ளது. இக்கோப்பிக் கோப்பையொன்றின் சராசரி விலை 50 அமெரிக்க டொலர்கள். இதேபோன்று தயாரிக்கப்படும் இந்தோனேசியாவின் வீசெல் கோப்பி weasel coffee இன் விலை கிலோ சுமார் 6600 அமெரிக்க டொலர்களாகும். இவ்வகை கோப்பி யின் அதிக விலைக்கான காரணம் என்னவெனில், கோப்பியின் கசப்புத்தன்மை குறைவாகும். இதற்குக் காரணம் அப்பிராணிகளின் செரிமானத்தில் ஏற்படும் இரசாயன மாற்றங்களாகும்.

# போக்குவரத்து இல்லாத கிராமம்



போக்குவரத்து வசதி இல்லாத கிராமங்களை பார்த்திருக்கிறோம். ஆனால் சாலைகள் இல்லாத கிராமங்களை பார்த்திருக்கிறீர்களா. ஹொலண்டில் ஒரு கிராமத்தில் சாலை போக்குவரத்து இல்லை. இங்குள்ள மக்கள் படகுகளில் தான் பயணம் செய்கிறார்கள்.

# Device Drivers Backup




நீங்கள் திடீரென்று ஏதாவது பிரச்சினை என்று கணினியை முழுதும் Format செய்யும் போது உங்களுடைய மென்பொருள்கள் மற்றும் தகவல்கள் அழிந்துவிடும்.

சில வேளைகளில் கணினியில் உள்ள வன்பொருட்களின் (Hardware) டிரைவர் கோப்புகள் (Device Drivers) அல்லது டிரைவர் கோப்புகள் உள்ளடக்கிய தாய்ப்பலகையின் நெகிழ் வட்டு (Motherboard CD) கூட கைவசம் இருக்காது. திடீரென்று கணினியை Format செய்து விட்டால் எங்கிருந்து ஓடியோ, வீடியோ மற்றும் கிராபிக்ஸ் டிரைவர் கோப்புகளை பெறுவது?

டிவைஸ் டிரைவர் கோப்புகள் (Device Driver Files) என்றால் என்ன?

கணிப்பொறியின் இயங்குதளமும் மற்ற துணைநிலை சாதனங்கள் (சான்றாக விசைப்பலகை,மவுஸ்,பிரிண்டர் போன்றவை) தொடர்பு கொள்ளுவதற்கும் குறிப்பிட்ட சாதனங்களை கட்டுப்படுத்துவதற்கும் இருக்கின்ற கோப்புகளே டிரைவர் கோப்புகள் எனப்படும். இவை இயங்குதளத்தால் வழங்கப்படும் அல்லது வன்பொருள் கருவிகளை தயாரிக்கிற நிறுவனங்களாலும் வழங்கப்படும். உதாரணமாக, Audio Drivers for Sound, VGA Drivers for Display, கிராபிக்ஸ்

இவை கண்டிப்பாக உங்கள் கணினிக்கு தேவைப்படும். நீங்கள் புதிதாய் ஏதாவது ஒரு கருவியை கணினியுடன் இணைக்கப்போகிறீர்கள் என்றால் அதற்கான டிவைஸ் டிரைவர் கோப்புகள் கணினியில் பதியப்பட்டால் மட்டுமே அது ஒழுங்காக வேலை செய்யும். கணினியை Format செய்யும் போது இந்த கோப்புகள் அனைத்துமே அழிந்துவிடும். புதிதாக இவற்றைத் தேடிக் கொண்டிருக்க முடியாது. எனவே இந்த கோப்புக்களை ஒரு CD யிலோ, DVD யிலோ Backup Copy எடுத்து வைத்துக் கொண்டால் இவற்றை மீண்டும் புதிய இயங்குதளத்திலும் பாவித்துக் கொள்ளமுடியும்.

இந்த டிவைஸ் டிரைவர் கோப்புகளை அப்படியே பேக்கப் எடுத்துக்கொள்ள ஒரு எளிய மென்பொருள் உள்ளது. இதன் பெயர் Double Driver.

இந்த மென்பொருள் மூலம் ஒரு முறை அனைத்து டிவைஸ் டிரைவர்களையும் பேக்கப் எடுத்து விட்டால் போதும். எப்போது வேண்டுமானாலும் நீங்கள் இதைக்கொண்டு பழையவற்றை மீட்டுக்கொள்ளலாம்.

நன்மைகள் :

1. இதைக்கொண்டு நிறுவப்பட்டுள்ள டிவைஸ் டிரைவர்களின் பெயர், பதிப்பு, தேதி, நிறுவனம் அறியலாம்.

2. ஒரு கிளிக்கில் பேக்கப் மற்றும் ரீஸ்டோர் செய்யலாம்.

3. இலவச மென்பொருள்.

4. எல்லா டிவைஸ் டிரைவர்களின் பெயர்களை அச்சிடலாம்.

கணினி மூலை

# குழந்தைகள் வியக்கும் பறவை



லண்டன் மிருகக்காட்சி சாலையில் நேற்றுமுன்தினம் விசாலமான பென்குயின் தடாகம் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. பென்குயின்கள் அவற்றின் இயல்பான சூழலில் வாழக்கூடியவாறு வசதிகளுடன் இந்தத் தடாகம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.


விரைவில் இங்கு 200 பென்குயின்களை வளர்க்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இங்கு விஜயம் செய்பவர்கள் இவற்றை மிகக் கிட்டிய தூரத்தில் அவற்றின் இயல்புத் தன்மையோடு பார்வையிடுவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

ஆரம்ப தினத்திலேயே சிறுவர்களை இது அதிகம் கவர்ந்துள்ளது.


இதற்கு முன் பென்குயின்கள் இயல்பான ஒரு இடத்தில் வைக்கப்பட்டிருந்தாலும் அந்த இடம் மிகவும் சிறியதாகவே இருந்தது. தற்போது பென்குயின் தடாகம், பென்குயின் கரை என்பன 13000 சதுர அடி பரப்பில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இத் தடாகம் ஒரு லட்சம் கலன் தண்ணீர் கொள்ளளவு கொண்டது.

# நவீன ஹோட்டல்



பல விதமான பேருந்துகளை நாம் பார்த்திருந்தாலும் நட்சத்திர ஹோட்டல்களில் உள்ள அறைகளைப் போல பேருந்தில் வடிவமைக்கப்பட்டிருந்தால் எப்படி இருக்கும். பயணம் சொகுசாகத்தான் இருக்கும். அப்படி வடிவமைக்கப்பட்ட பேருந்து இது. இந்தப் பேருந்துக்குள் ஒரு நட்சத்திர விடுதியில் எதுவெல்லாம் இருக்குமோ பெரும்பாலும் அத்தனையும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.



# உலகில் தீவிரவாதத்தை ஒழித்துக்கட்டுவதற்கு இந்திய, அமெரிக்க உறவு பலமாக வேண்டும்

## என்கிறார் உள்துறை அமைச்சர் சிதம்பரம்

(புதுடெல்லி)

உலக அளவில் தீவிர வாதத்தை ஒழிக்க வேண்டும் என்றால் இந்தியா-அமெரிக்கா இடையே பலமான உறவு இருக்க வேண்டும் என்று மத்திய உள் துறை அமைச்சர் ப.சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

இந்தியா-அமெரிக்கா இடையே உள்நாட்டு பாதுகாப்பு குறித்த பேச்சுவார்த்தை நேற்று இருநாட்டு பிரதிநிதிகளுக் கிடையே புதுடெல்லியில் தொடங்கியது. முதல் நாள் அன்று நடைபெற்ற கூட்டத்தில் மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் கலந்துகொண்டு பேசுகையில், மேற்கண்டவாறு கூறினார்.

இந்தியாவை சுற்றியுள்ள அண்டைநாடுகள் கடின போக்கை கையாளுகின்றன. பாகிஸ்தானில் தீவிரவாத இயக் கங்களுக்கு தேவையான உள் கட்டமைப்பு வசதிகள் அனைத் தும் இருக்கின்றன.

அங்கிருந்துதான் இந்தியா வுக்குள் தீவிரவாதம் நுழை கிறது. தீவிரவாதத்தை அந்த நாட்டு அரசு ஒரு கொள்கையாக வைத்திருக்கிறது. அதனால் உலக அளவில் தீவிரவாதத்தை யும் இதர அச்சுறுத்தல்களையும் எதிர்த்து போரிட வேண்டு மென்றால் இந்தியா-அமெரிக்கா இடையே வலுவான உறவு



இருக்க வேண்டும் என்று சிதம் பரம் வலியுறுத்திக் கூறினார்.

இந்திய மக்களின் பாது காப்புக்கு அண்டை நாடுகளில் அமைதி, முன்னேற்றம் இருக்க வேண்டும். உலகத்திலேயே இல்லாத அளவுக்கு இந்தி யாவை சுற்றியுள்ள அண்டை நாடுகளால் அச்சுறுத்தலும் ஆபத்தும் ஏற்பட்டுள்ளது.

நமது மிகவும் அண்டை நாடான பாகிஸ்தான் தீவிர வாதத்தின் மையமாக திகழ்கி றது என்றும் அமைச்சர் ப.சிதம் பரம் மேலும் கூறினார்.

# தீ விபத்து அலாரம் ஒலித்ததால் தரையிறக்கப்பட்ட விமானம்

(சென்னை)

மும்பை-ஹைதராபாத் ஸ்பைஸ்ஜெட் விமானத்தில் திடீரென தீ விபத்து அலாரம் ஒலித்ததால் 140 பயணிகளுடன் மும்பையில் அந்த விமானம் அவசரமாகத் தரையிறக்கப்பட்டது.

மும்பை விமானநிலையத்தில் இருந்து நேற்று முன்தினம் காலை 5.30 மணிக்கு ஸ்பைஸ்ஜெட் விமானம் புறப்பட்டது. தீ அலாரம் ஒலித்ததால் 6.05 மணியளவில் மீண்டும் மும்பை விமானநிலையத்தில் பாதுகாப்பாக தரையிறக்கப்பட்டது.

தீ அலாரம் ஒலித்ததையடுத்து 5.58 மணியளவில் முழு அவசரகால அறிவிப்பு வெளியிடப்பட்டதாக மும்பை விமான நிலைய கட்டுப்பாட்டு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

எனினும் தீவிர சோதனைக்குப் பின் தீ எதுவும் ஏற்படவில்லை எனக் கண்டறியப்பட்டதால் 7.08 மணியளவில் அவசரநிலை வாபஸ் பெறப்பட்டது. இதைத்தொடர்ந்து அனைத்து செயற் பாடுகளும் இயல்புநிலைக்குத் திரும்பியதாக அந்த அதிகாரி தெரிவித்தார்.

# தே.மு.தி.கவிற்கு கிடைத்தது எதிர்க்கட்சி அங்கீகாரம்

(சென்னை)

தமிழக சட்டசபை தேர்தலில் அ.தி.மு.க.வுடன் கூட்டணி சேர்ந்து தே.மு.தி.க. 41 தொகுதிகளில் போட்டியிட்டு 29 இடங்களில் வெற்றி பெற்றது. சட்டசபையில் 2 ஆவது பெரிய கட்சியாக இருப்பதால் தே.மு.தி.க.வுக்கு எதிர்க்கட்சி அந்தஸ்து கிடைத்துள்ளது.

தமிழ்நாடு சட்டமன்ற பேரவையின் செயலாளர் அ.மு.பி.ஜமாலு தீன் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தேசிய முற்போக்கு திராவிடக் கட்சியை பிரதான எதிர்க்கட்சியாகவும் அதன் சட்டமன்ற கட்சித் தலைவரான விஜய காந்தை தமிழ்நாடு சட்டமன்ற பேரவையின் எதிர்க்கட்சித் தலைவராகவும் சட்டமன்ற பேரவைத் தலைவர் அங்கீகரித்துள்ளார் என்று கூறப்பட்டுள்ளது.



ஒரு அமைச்சருக்கு (ஆர்.பி.உதயகுமார்) செருப்பு பிடிக்காது என்றால் அவிநாசித் தொகுதி அ.தி.மு.க எம்.எல்.ஏ கருப்ப சாமிக்கு கமரா பிடிக்காதாம்! அமைச்சர் கமராவுக்குப் பதுங்கும் காட்சி.

# பிணை மனு நிராகரிக்கப்பட்டால் அடுத்த கட்ட நடவடிக்கை என்ன?

## கனிமொழியை சந்தித்து அழகிரி ஆலோசனை

(புதுடெல்லி)

2ஜி ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீடு முறைகேடு தொடர்பான வழக் கில் கனிமொழி எம்.பி. கைது செய்யப்பட்டு டெல்லி திகார் சிறையில் அடைக்கப்பட்டுள் ளார்.

அவரை தி.மு.க. தலைவர் கருணாநிதி, மு.க.ஸ்டாலின் மற்றும் குடும்பத்தினர் ஏற் கனவே சந்தித்து பேசினார்கள்.


இந்த நிலையில் கனி மொழியை மத்திய அமைச்சர் மு.க. அழகிரி சந்தித்துப் பேசி னார். இந்த சந்திப்பு நேற்று முன்தினம் மாலை 5.15 மணி முதல் 6 மணி வரை நடந்தது. இந்தச் சந்திப்பின்போது மத்திய அமைச்சர் நெப் போலியனும் உடன் இருந்தார். கனி மொழியின் பிணை மனு மீதான தீர்ப்பு டெல்லி உயர் நீதி மன்றில் வருகிற 30 ஆம் திகதி வழங்கப்படும் என்று தெரிகி றது.



இந்தத் தீர்ப்பு தங்களுக்கு சாதகமாக இல் லாத பட்சத்தில் மேற் கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து சட்ட வல்லுனர்களுடன் ஆலோசனை நடத்தப்படும் என்று கூறப்படுகிறது.

இது தொடர்பாக முன் னாள் அமைச்சர் தங்கம் தென்னரசுவும் சென்னையில் இருந்து டில்லி புறப்பட்டுச் சென்றார்.

## மனிதனை மனிதனாக மதிப்போம்




எந்த மதமானாலும் மதங்க ளின் வேர் விசுவாசத்தில் தான் மையம் கொண்டிருக்கிறது. அதன் கிளைகள் மனிதத்தின் மீது மலர் சொரியவேண்டும். மனிதத்தின் மையத்தில் புயலாய் மையம் கொண்டு சமுதாயக் கரைகளைக் கருணையின்றிக் கடக்கும் எந்த மதமும் அதன் அர்த்தத்தைத் தொலைத்து விடுகிறது.

*கிறிஸ்தவம்....?*

இது எப்போதுமே அன்பின் அடிச்சுவடுகளில் பாதம் பதித்து, அயலானின் கண்ணீர் ஈரம் துடைக்கும் கைக்குட்டையோடு காத்திருக்கும் மதம். பல்லுக்குப் பல் என்னும் பழி வாங்கல் கதைகளிலிருந்து விலகி, வாழ்வியல் யதார்த்தங்களின் கரம் பிடித்து, சமுதாயத்தின் அடிமட்ட மக்களின் வியர்வையும், குருதியும் கலந்த வேதனைப் பிசுபிசுப்பை துடைத்தெறியத் துடித்தவர்தான் இயேசு.

கடவுளினின்று மனிதனாக, மனிதனிலிருந்து கடவுளாக நிரந்தர நிவாரணமாக உலவுபவர் தான் இயேசு.

தோப்புக்குத் தெரியாமல் குருவிக்குக் கூடுகட்டிக் கூட கொடுக்காத ஒரு சமுதாயத்தினரிடம், நீ வலக்கையால் செய்யும் தானம் இடக்கைக்குத் தெரியவேண்டாம் என்று அன்பின் ஆழத்தை அகலப்படுத்துகிறார். எதிரியை நேசி என்னும் அறிவுரையால் அன்பை ஆழப்படுத்துகிறார். இன்னும் இதயம் தொடும் ஏராளம் அறிவுரைகளை அளித்து அன்பை நீளப்படுத்துகிறார்.

விசுவசியுங்கள், நம்பிக்கையில்லாமல் செய்யும் செயல்கள் எல்லாம் நடுக்கடலில் விழுந்த துடுப்பிழந்த படகு தான். விசுவசியுங்கள் வாழ்வடைவீர்கள், நம்புங்கள் மீட்படைவீர்கள்...

எனவே மனிதத்தை மதித்து, அன்பு செய்ய முற்படுவோம்...

*யா.அலெக்சாண்டர்*
*மறையாசிரியர்*

# சோனியா - தயாநிதி மாறன் சந்திப்பு டில்லி அரசியல் வட்டாரத்தில் பரபரப்பு



(புதுடில்லி)

தி.மு.க. தலைவர் கருணாநிதியின் பேரனும் மத்திய ஜவுளித் துறை அமைச்சருமான தயாநிதி மாறன், அகில இந்திய காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியை அவரது இல்லத்தில் கடந்த வியாழக் கிழமை சந்தித்திருப்பது டில்லி அரசியல் வட்டா ரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள் ளது.

தி.மு.க.வின் சார்பாக இதுவரை டில்லி பணிகளை கட்சி நாடாளுமன்றத் தலைவர் டி.ஆர். பாலு மேற்கொண்டு வரும் நிலையில், காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியை மத்திய அமைச்சர் தயாநிதி மாறன் திடீரென்று சந்தித்திருப்பது தலைமையின் ஒப்புதலுடன் நடைபெற்று இருக்குமா என்பது போன்ற கேள்விகள் டில்லி அரசியல் வட்டாரங்களில் எழுப்பப்படுகின் றன.

ஐக்கிய முற்போக்குக் கூட்டணி, முதல் முறையாக ஆட்சி அமைத்தபோது அதில் மத்திய தொலைத்தொடர்புத் துறை அமைச்சர் பதவியில் தயாநிதி மாறன் இருந்தார். முரசொலி மாறனின் மறைவுக்குப் பிறகு மத்திய அரசுடனும் காங்கிரஸ் தலைமையுடனும் தி.மு.க.வின் அதிகாரபூர்வத் தூதராக செயல்பட்டது தயாநிதிமாறன்தான்.

2-ஜி அலைக்கற்றை ஒதுக்கீடு தொடர்பான விசாரணையில், 1999 ஆம் ஆண்டு முதல் தொலைத்தொடர்புத் துறை சம்பந்தப்பட்டவர் களிடம் நாடாளுமன்றக் கூட்டுக் குழு விசாரணை நடத்தக்கூடும் என்று தெரிகிறது. இத்தகைய சூழலில் சோனியா காந்தியை தயாநிதிமாறன் சந்தித்தது அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

திமுக தலைமையின் ஒப்புதலுடன்தான் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியை தயாநிதி மாறன் சந்தித்தாரா, இல்லை, தனிப்பட்ட முறையில் சந்தித்தாரா என்ற கேள்வியும் எழுப்பப்படுகிறது. தயாநிதி மாறன், சோனியா காந்தி சந்திப்பின்போது தமிழ்நாடு காங்கிரஸ் கட்சிப் பொறுப்பாளர் குலாம் நபி ஆசாதும் உடன் இருந்தார் என்பது குறிப்பிடத் தக்கது.

# குண்டு வீச்சிலிருந்து தப்புதவதற்காக வைத்தியசாலைகளில் தங்கும் கடாபி


(திரிபோலி)

நேட்டோப் படையினரின் விமானத் தாக்குதல்களில் இருந்து தப்பிக்கும் வகையில் லிபிய ஜனாதிபதி கடாபி வைத்திய சாலைகளில் தங்குவதாக லண்டனில் இருந்து வெளிவரும் பத்திரிகையொன்று தெரிவித்துள்ளது.

கடாபியின் மாளிகையும், அவரது அலுவலகமும் நேட்டோப் படையினரின் தாக்குதல்களினால் இடிந்து சேதம் அடைந்துள்ளன.

இருந்தும் கடாபி பணிய மறுககிறார். பதவி விலக முடியாது என அடம் பிடிக்கிறார். எனவே அவரை நேட்டோப் படைகள் குறி வைத்துள்ளன. இதனால் மரண பயத்தில் உள்ள அவர் தான் உயிர பிழைக்க புதிய யுக்தியைக் கையாண்டு வருகிறார்.

இரவு நேரங்களில் தனது மாளிகையில் தங்காமல் தினமும் ஒரு ஆஸ்பத்திரிகளில் பதுங்குகிறார். ஏனெனில் நோயாளிகள் தங்கிச் சிகிச்சை பெறும் ஆஸ்பததிரிகளில் குண்டு வீசக்கூடாது என சர்வதேச போர் விதி உள்ளது.



இதனால் அங்கு நேட்டோப் படைகள் குண்டு வீசாது என அவர் நம்புகிறார். இந்தத் தகவலை இங்கிலாந்தின் உளவுப் பிரிவான எம்.16 நிறுவனம் பிரதமர் டேவிட் கெமரூனிடம் தெரிவித்துள்ளது.

# பாகிஸ்தானுக்கு ஆயுத உதவி வழுங்குவதற்கு பிரான்ஸ் மறுப்பு

(புதுடெல்லி)

மும்பைத் தாக்குதலில் தொடர்பு இருப்பதாகத் தகவல் வெளியானதைத் தொடர்ந்து பாகிஸ்தானுக்கு பிரான்ஸ் ஆயுத உதவி அளிக்க மறுத்துவிட்டது. இதுகுறித்து பிரான்ஸ் பாதுகாப்புத் துறை அமைச்சர் ஜெரால்ட் லாங்கட் கூறியதாவது:-

ஒசாமா பின்லேடன் பாகிஸ்தானின் அபோதாபாத் நகரில் சுட்டுக் கொல்லப்பட்டது பல கேள்விகளை எழுப்பியுள்ளது. இதற்கு பாகிஸ்தான் அரசு விளக்கம் அளிக்க வேண்டும். பாகிஸ்தான் அரசு போதுமான விளக்கம் அளிக்கும் வரையில் இராணுவத் தளபாடங்கள் விற்பனை செய்வது நிறுத்தி வைக்கப்படும்.

இந்தப் பிரச்சினை குறித்து அண்மையில் பிரான்ஸ் தலைநகர் பாரிசில் பாகிஸ்தான் பிரதமர் கிலானியுடன் நடந்த பேச்சுவார்த்தையின் போது விவாதிக்கப்பட்டது.

மும்பைத் தாக்குதலில் ஐ.எஸ்.ஐ. அமைப்புக்குத் தொடர்பு இருப்பது தெரிய வந்துள்ளது. தீவிரவாதம் என்ற ஆயுதத்தை எந்த அமைப்போ, அரசோ கையில் எடுத்துக்கொள்வதை அனுமதிக்க முடியாது. தீவிரவாதத்தை எதிர்த்துப் போராட பாகிஸ்தானுக்கு பிரான்ஸ் மின்னணு இயந்திரங்களை மட்டுமே வழங்கி வருகிறது. பாகிஸ்தானின் இராணுவத் தளபாடங்கள் உதவி பெறுவதற்கான வேண்டுகோளை நாங்கள் நிராகரித்துவிட்டோம் எனத் தெரிவித்தார்.

## உலகச் செய்திகள்

# எட்டுப்பேர் பலி

(பாகிஸ்தான்)

பாகிஸ்தானில் தீவிரவாதிகளின் தற்கொலைப்படைத் தாக்குதலில் 8 பேர் உயிரிழந்துள்ளனர். 12 பேருக்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்துள்ளனர்.

பஜாவூர் பகுதியில் பாதுகாப்புப் படை அலுவலகம் அருகே மக்கள் நெரிசல் அதிகம் இருக்கும் பகுதியில் குண்டு வெடித்தது.

இச்சம்பவத்தை அடுத்து அங்கு பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர். படுகாயம் அடைந்தவர்கள் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

# ஐந்து பயங்கரவாதிகளின் விபரத்தை பாகிஸ்தான் அரசு அளிக்க வேண்டும்

## அமெரிக்கா அறிவிப்பு

(கராச்சி)

உலகில் சதித்திட்டம் தீட்டி செயற்பட்டு வரும் பயங்கரவாதிகள் 5 பேர் கொண்ட பெயரப் பட்டியலை அமெரிக்கா, பாகிஸ்தானிடம் கொடுத்தது. இந்த நபர்களின் முழுவிவரமும், இவர்களை கைது செய்ய பாகிஸ்தான் அரசு முழு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரியுள்ளது.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் ஒசாமா பாகிஸ்தானில் பதுங்கியிருந்த போது அமெரிக்க படையினரால் வேட்டையாடப்பட்டான். இதில் இருந்து அமெரிக்காவுக்கு பாகிஸ்தான் மீது சந்தேகம் வலுத்தது. காரணம் உள்ளூர் ஆதரவு இல்லாமல் ஒசாமா எப்படி இங்கு வாழ்க்கை நடத்தியிருக்க முடியும் என்று அமெரிக்கா கேட்கிறது. இந்நிலையில் அமெரிக்க வெளியுறவுத் துறைச் செயலர் கிலாரி கிளின்டன் பாகிஸ்தான் சென்று அங்குளள பாதுகாப்புத்துறை அதிகாரிகளிடம் சந்தித்துப் பேசினார்.

இதனையடுத்து அமெரிக்காவால் தேடப்பட்டு வரும் குற்றவாளிகள் 5 பேர் கொண்ட பட்டியலை கொடுத்தார். இதில் அடங்கியிருப்பதில் முக்கியஸ்தர்கள் விவரம் வருமாறு:

அல்குவைதாவின் முக்கியப் புள்ளியும், ஒசாமாவின் வலதுகரமாக இருந்தவருமான அயுமான் அல்ஜவாரி, தலிபான் இயக்க தலைவர் முல்லாஒமர், சிராஜ் ஹக்கானி (ஹக்கானி அமைப்பின் ஒப்ரேஷனல் கொமாண்டர்), இலியாஸ் காஷ்மீரி (மும்பை தாக்குதலில் உள்ள ஒரு சதிகாரன்), ஆதித்யா அப்துல் ரஹ்மான் இந்தப் பயங்கரவாதிகள் குறித்த முழுவிவரம் உடனடியாகத் தருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் விபரமோ, கைது செய்யவோ மறுக்கும் பட்சத்தில் அமெரிக்கா ஒசாமா பின்லாடனை வேட்டையாடியது போல் மீண்டும் பல முறை இறங்கிட முயற்சிக்கும் எனப் பாகிஸ்தானில் இருந்து வெளியாகும் டான் பத்திரிகை கூறியுள்ளது.

# சிரிய ஆர்ப்பாட்டக்காரர் மீது சூடு சம்பவத்தில் எட்டுப் பேர் பலி

(தமஸ்கஸ்)




சிரிய அரசாங்கத் திற்கு எதிராக நேற்று முன் தினம் ஆர்ப்பாட்டக்காரர்கள் மேற்கொண்ட போராட்டங்கள் மீது பாதுகாப்புப் படையினர் மீண்டும் தாக்குதலை மேற்கொண்டதில் 8 பேர் உயிரிழந்துள்ளனர். தலைநகரான தமஸ்கஸ் உள்ளிட்ட பல நகரங்களில் நேற்றுமுன்தினம் இவ் ஆர்பாட்டங்கள் நடந்தன. வெள்ளிக்கிழமை தொழுகையை நிறைவு செய்ததன் பின்னர் பெருந்தொகையானவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கு கொண்டனர். இதனைக் கட்டுப்படுத்த பாதுகாப்புப் படையினர் ஆர்ப்பாட்டக்காரர்கள் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர்.

இதன் காரணமாக 8 பேர் பலியானதாக சர்வதேச மனித உரிமை அமைப்பு தெரிவித்துள்ளது. இதனிடையே பிரான்சில் கூடியுள்ள ஜீ-8 நாடுகளின் தலைவர்களும் சிரிய அரசாங்கத்தின் அடக்கு முறையைக் கண்டித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மெய்தான் பாருங்கோ!

## ஓட்டுண்ணிகள்



கனநாளைக்குப் பிறகு யாழ்ப்பாண ரவுணுக்குள்ள அந்தப் பொடியனைச் சந்திக்கிறன். எதிர்பாராத சந்திப்பு அது. பொடியனை அடையாளம் கண்டு பிடிக்கக் கொஞ்சம் கஷ்டமாய்தான் கிடந்தது எனக்கு. அந்தளவுக்கு அவன் கோலம்மாறி குழையள் ஒடிக்கிறதுக்குப் பயன்படுத்துற 'கொக்குத் தடி' மாதிரி யிருந்தான்.

எனக்கு அவனைப் பார்க்கப் பாவ மாக இருந்தது. போர் ஒண்டு வந்ததால எல்லாருடைய கதையளும் புஸ்வாணமாய்ப் போச்சுது. இவனுடைய கதையும் அதே மாதிரித்தான். வன்னியில இயக்கத் தோடை சேர்ந்து திரியேக்கை தன்னை எவனும் அசைக்கேலாதெண்டு திரிஞ்சவனுக்கு போர் வந்து பெரியதொரு அடியைப் போட்டிட்டுப் போயிட்டது.

"ஐயா...ஐயா..." அவன் அழத் தொடங்கிவிட்டான் பாருங்கோ. "ஐயா! இந்த வன்னிச் சண்டையால என்ர வாழ்க்கையே நாசமாப் போயிட்டுது ஐயா. கண்ட கனவெல்லாம் கலைஞ்சு போச்சுதையா. கனவருசமா அவங்களோடை சேர்ந்து திரிஞ்ச எனக்கு, ஒரு சாவு வந்தா பெயருக்கு முன்னால 'நாட்டுப் பறறாளா' அல்லது 'மாமனிதர்' பட்டம் போட்டு துயிலுமில்லத்தில என்னைத் தூங்க வைப்பாங்கள் எண்டு நினைச்சிருந்தன். கடைசியில இந்தச் சண்டை வந்ததால நான் கண்ட கனவெல்லாம் கானலாய்ப் போச்சுதே... ஆ....ஐயோ... டாய் சிங்களவா..." எண்டு பொடியன் கத்திக் குளறியபடி, கால் மட்டத்துக்குக் கீழ கிடந்த சாரத்தைத் தூக்கி 'சண்டிக்கட்டு' கட்டுறதுக்குப் பதிலா 'கொடுக்குக்கட்டு' கட்டுறதைக் கண்டதும் எனக்கு குலை நடுங்கத் தொடங்கியிட்டுது.

நான் இதைக் கொஞ்சம் கூட எதிர்பார்க்கேல்லை. எதிர்பார்ப்புகள் ஏமாற்றங்களாகிப் போன அதிர்ச்சியில, பொடியன்ர மூளைப் பகுதிக்குள்ள ஏற்கனவே 'நட்டொண்டு' கழண்டு போச்சுதெண்ட உண்மை அப்பதான் எனக்குள்ள உறைக்க, எடுத்தன் பாருங்கோ ஓட்டம்!

ராஜாத் தியேட்டருக்கு முன்னால தொடங்கின என்ர மரதன் ஓட்டம் கஸ்தூரியார் வீதி, ஆஸ்பத்திரி வீதி, முனீஸ்வரன் வீதியூடாகப் போய முனியப்பர் கோயிலுக்கு முன்னால உள்ள ரோட்டில ஒரு 'சடின் பிரேக்' அடிச்சு நிண்டுது.

நல்லவேளை! பொடியனும் என்னை விட்டுத் துரத்தேல்லை. றோட்டில நிண்ட பொதுச்சனமும் என்னைப் புதினமாப் பாக்கேல்லை. தலை தப்பினது தம்பிரான் புண்ணியமாப் போச்சுது.

ஆனாலும் பாருங்கோ! எனக்கு என்ன நடந்ததெண்டு ஓடிய களைப்பிலயிருந்து ஒண்டுமாப் புரியேல்ல. மூச்சு மேலையும் கீழையுமா எகிறிக் குதிச்சுக் கொண்டிருந்தது. பூமி என்னைச் சுற்றிச் சுழலுதா? இல்லை நான் பூமியைச் சுற்றித் திரியுறனா...? எண்ட மனப்பிரமை எனக்குள்ள வர, உடன அந்த இடத்தில் குந்தியிட்டன்.

மனசு ஒரு நிலைக்கு வர வெகுநேரம் பிடிச்சுது. என்ர பார்வை சுற்றுச் சூழலை அவதானிச்ச நேரத்தில நான் யாழ்ப்பாண ரவுணுக்குள்ளதான் நிற்கிறன்....எண்ட உணர்வு வர, கொஞ்சம் நிம்மதியாயிருந்தது. அதே நேரத்தில அந்தப் பொடியன்ர முகமும் நினைவுக்கு வந்தது.

எங்கட சனங்கள் மீது சிங்கள இனவாத அரசுகள் ஏவிட்ட இனப்படுகொலைகள் கொஞ்சம் நஞ்சமல்ல. அதுக்கு நாங்கள் விட்ட கண்ணீரும் மிகக்குறைஞ்ச அளவில இல்லை.

நவாலித் தேவாலயப் படுகொலை.... நாகர்கோவில் பள்ளிச் சிறார்கள் படுகொலை... சுதந்திரபுரம் படுகொலை.... கொக் கட்டிச்சோலைப் படுகொலையெண்டு பட்டியல் நீளுறதைப் பாத்திட்டுத்தான் எல்லாரும் உணர்ச்சிக் கொதிப்பில போராட வெளிக்கிட்டனாங்கள் கண்டியளே!

இந்தப் போராட்டத்துக்கை அடிபாட்டில செத்துப்போனது களின்ர பெயரை வைச்சுக் குளிர் காயலாமெண்டு வெளிக்கிட்ட கூட்டத்துக்கை உந்தப் பொடியனும் ஒண்டுதானெண்டது புரிஞ்ச மாதிரியிருந்தது எனக்கு.

சே... என்ன மனிசர் உதுகள்...?

உதுகளைப் போல சுயநலங்கள் இயக்கத்துக்குள்ள இருந்து கொண்டு, அடுத்தவனை அடிபாட்டுக்கு அனுப்ப வெளிக்கிட்டதாலதான் எல்லாம் முள்ளிவாய்க்காலோடை முடங்கிப் போனதெண்டது முற்றிலும் மெய்தான் பாருங்கோ!

"ஆரம்ப காலத்தில தோழமையோடு கரம் கோர்த்த மாற்று இயக்கங்களைப் 'போட்டுத்தள்ளிப் போட்டு' நம்பக் கூடியவங்களையெல்லாம் நடுத்தெருவுக்குத் துரத்திப்போட்டு, நம்பக்கூடாத ஆட்களையெல்லாம் பிரபாகரன் தனக்குப் பக்கத்தில வைசசிருந்தபடியாலதான் வன்னிச் சனத்தின்ர வாழ்க்கை கடைசியில உப்பிடி நாறிப்போனது..." எண்டு செட்டிக்குளம் அகதி முகாமில தண்ணிக்கு வரிசையில நிற்கேக்கை ஒரு ஆச்சி சொன்னது ஞாபகத்துக்கு வந்தது.

யோசிச்சுப் பாத்தா ஆச்சி சொன்னதும் ஒரு வகையில சரியாத்தான் கிடக்குது கண்டியளே!

-சின்னக்குட்டி சின்னச்சாமி-

# அதிகாரிகளின் அசமந்தப் போக்கு; துருப்பிடிக்கின்றன உழவு இயந்திரங்கள்

இலங்கையில் போர் முடிவிற்கு கொண்டுவரப்பட்டதாகக் கூறப்பட்டு , இரண்டு வருடங்கள் கடந்த நிலை யிலும், அந்தப் போரின் காயங் களிலிருந்து மாறாமல் இருக்கும் குடும்பங்கள் மிகவும் அதிகம். அதிலும் வன்னிப் பெருநிலப்பரப்பில் இருந்த மக்களின் துன்பங்கள் பெரும் நீண்ட சோகக் கதை.

இவ்வாறு போரினால் பல்வேறு இன்னல்களையும் அனுபவித்த மக்கள் தற்போது மீள்குடியேற்றப்பட்ட நிலையில் மெல்ல, மெல்லத் தமது வாழ்வாதாரத்தை ஆரம்பிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

வன்னி என்றாலே முதலில் எம்முன் தோன்றுவது அடர்ந்த காடுகள், வயல் நிலங்கள், குளங்கள், ஆறுகள்தான். இந்த வளமான பகுதிக்குள் இருந்த பெருமளவான மக்களின் வாழ்க்கை விவசாயம்தான். அந்த விவசாயத்தை நம்பியே மக்கள் அங்கு ஜீவனோபாயத்தை முன்னொரு காலத்தில் மேற்கொண்டு வந்தனர்.

இவ்வாறு விவசாயத்தை மேற்கொண்டு வந்த மக்களை முன்னர் யாழ்ப்பாணம் உட்படப் பிற மாவட்டங்க ளிலிருந்து கடமைக்காக சென்ற உயர் அதிகாரிகள் எவ்வாறு நடாத்தினார்கள் என்பது வன்னியில் வாழும் மூத்த குடிமக்களிடம் கேட்டால் சொல்வார்கள்.

இதன்பின் புலிகளின் ஆட்சி 2009 ஆம் ஆண்டு மேமாதம் வரையிலும், புலிகள் அங்குள்ள மக்களை எவ்வாறு தமது தேவைக்குப் பயன்படுத்தினார்கள் என்பது உலகறிந்த உண்மை.

இன்று புலிகளின் காலம் முடிந்து அதிகாரிகளின் காலம் மறுபடி வந்துள்ளது. இவ்வாறு அதிகாரிகளின் காலத்தினுள் மறுபடியும் வன்னி மக்கள் தமக்குத் தேவையான சகலவற்றையும் பெற்றுக்கொள்வதற்கு படாதபாடு படவேண்டியவர்களாக உள்ளனர்.

இதிலும் குறிப்பாக விவசாயிகளின் நிலையோ படுமோசமாக உள்ளது. இதில் கைக் கெட்டியது வாய்க்கெட்டாததுபோல பூநகரி விவசாயிகளின் நிலையைக் குறிப்பிடலாம்.


அநாதரவான உழவு இயந்திரங்கள்

பூநகரி கமநல சேவைத் திணைக் களத்தின் எல்லைக்குள் இயங்கும் 19 கமக்கார அமைப்புகள் ஊடாக அப் பகுதி விவசாயிகள் நன்மை பெறும் வகையில், வடக்கின் வசந்தம் திட்டத்தினூடாக 19 உழவு இயந் திரங்களும் அவற்றுக்கான உழவுக் கலப்பைகளும் வழங்கப்பட்டு ஒரு மாதத்தை அண்மித்து வருகிறது.

ஆனால், விவசாயிகளுக்கு நன்மை பயக்கவென வழங்கப்பட்ட இந்த உழவு இயந்திரங்களும், உழவுக் கலப்பைகளும் அவர்களது கமக்கார அமைப்புகளுக்கு வழங்கப்படாதநிலையில், பூநகரி கமநல சேவைத் திணைக் கள முன்றலில் பெய்யும் மழையையும், வெயிலினையும் தாங்கியபடி உள்ளன.

இவற்றை விவசாயிகளுக்கு கொடுப்பதற்கு அதிகாரிகளுக்கு மனம் வரவில்லையென்றால், அதனை உரிய முறையில் பாதுகாக்க வேண்டு மல்லவா? எனவே, இவற்றைப் பாதுகாக்க வேண்டியவர்கள் யார்?

வீட்டில் ஆடு, மாடு, சைக்கிள், மோட்டார் சைக்கிள் என்பன மழையில் நனைந்தாலோ, வெயிலில் காய்ந் தாலோ அவற்றைப் பாதுகாப்பான இடத்தில் வைப்பதற்கு உடன் முயற்சி களை எடுக்கும் நாம், இன்று ஒரு மாதத்திற்கும் அண்மித்த வகையில் உள்ள இந்தப் பெறுமதியான பொருட் களைப் பாழடைய விடுவது ஏன்?

காலபோக நெற்செய்கை முடி வடைந்து தற்போது பூநகரிப் பகுதியில் 400 ஏக்கர் நெற்செய்கை செய்வதற்கு அனுமதியளிக்கப்பட்ட நிலையில், விவசாயிகளின் தேவைகளுக்கு வழங்கப்பட்ட உழவு இயந்திரங்கள் தூங்கிக்கொண்டிருக்கின்றன.

ஆனால், விவசாயிகளோ தமது நிலத்தைப் பண்படுத்துவதற்கு உழவு இயந்திரம் பிடிப்பதற்கு கிளிநொச்சிக்குச் செல்லவேண்டியுள்ளது. ஆனால் பூநகரிப் பகுதியில் பெயர்பெற்ற சிலரின் உழவு இயந்திரங்கள் சேவையில் ஈடுபடுகின்றன. இந்த உழவு இயந்திரங்களுக்கு ஒரு ஏக்கருக்கு 1500 ரூபா கொடுக்க வேண்டியுள்ளதாக அப்பகுதி விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதுபோன்றே கடந்தகால பெரும்போகச் செய்கையிலும், மானியமாக விதை நெல்லும், பசளை வகைகளும், உழவுக் கூலியாக 4 ஏக்கருக்கு மேற்படாமல் தலா 4000 ரூபாவும் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் யுத்தத்தால் அனைத்தையும் இழந்த விவசாயிகளுக்கு மேற்படி அறிவித்தல் சற்று ஆறுதல் அளித்த நிலையில், அவர்களும் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் தமது நெல்வயல்களைப் பண்படுத்தி விதைப்பிற்குத் தயாரானவேளை, விதை நெல் வழங்கப்பட்டும் பசளைகளை வழங்குவதில் அதிகாரிகள் அசமந்தப் போக்கு காரணமாக உரியவேளையில் பசளையைப் பெற்று வீசமுடியாத அவலநிலையால் நெல்விளைச்சலில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.


துருப்பிடிக்கும் கலப்பைகள்

உழவுக்கான பணம் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்ட போதிலும், இன்றுவரை அதனைப் பெற்றுக்கொடுக்க அதிகாரிகள் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

*'மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்தது போல்'* போதிய விளைச்சலுமின்றி கடன் சுமையில் அதிகாரிகளினால் ஏமாற்றப்பட்ட நிலையில், வேதனையில் வெந்துகொண்டிருக்கிறான் விவசாயி.

இவ் விவசாயிகளின் அவலநிலை உரிய அதிகாரிகளுக்குத் தெரியவில்லையா?

மக்களுக்குச் சேவை செய்பவர்களே அரச பணியாளர்கள். இவ்வாறு மக்கள் நலன் பாராது அரசின் திட்டங்களை உதாசீனம் செய்பவர்கள் குறித்து நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட உழவு இயந்திரங்களை கண்காட்சிக்கு வைக்காமல், அதனை உரியவர்களுக்கு வழங்கி, அவர்கள் பயனடையச் செய்ய வேண்டும்.

இதைவிடுத்து பதவியில் ஒட்டிக் கொண்டிருக்கும் அதிகாரிகளும் மக்கள் பிரதிநிதிகள் எனத் தம்மைத் தாமே அழைக்கும் பிரதிநிதிகளாலும் எவ்வித பயனையும் மக்கள் அடையப் போவதில்லை. எனவே, இது தொடர்பாகச் சம்பந்தப்பட்டவர்கள் உணர்ந்து செயற்படும் காலம் எப்போது?

வடபகுதிக்கு அரசின் முக்கிய அமைச்சர்களிலிருந்து அதிகாரிகள் வரை அடிக்கடி வந்து செல்கின்றனர். அவர்களின் கண்ணில்கூட இது படவில்லையா? அல்லது அவர்களும் அதிகாரிகளின் பேச்சைக் கேட்டுச் செல்கின்றார்களா?

இதில் ஒட்டுமொத்தமாக பாதிக்கப்படுவது விவசாயிகள் என்பதனை ஏன் அனைவரும் மறக்கின்றனர்.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுதான் வராதா...?

***பூநகர்ப் புரவி.***

---

# சர்வதேசத்தின் நல்லெண்ணத்திலும் தர்மத்திலும் தங்கியிருக்க முடியாது

**கனடிய தமிழ்மன்றத்தில் ரொறன்ரோ பல்கலைக்கழக பேராசிரியர் கலாநிதி ஜோசப் சந்திரகாந்தன் வழங்கிய உரையிலிருந்து ஒரு பகுதி**

இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட ஓர் தேசிய அணியாக, ஒரு சமூகமாக எம்மைச் சுற்றி எந்தவிதமான விமர்சனமும் இல்லாமல் நாம் உருவாக்கிய அரசியல் மாயையில் இருந்து நாம் வெளிவர வேண்டும்.

எமது குறுகிய தேசியவாதம் எமக்கும் எமது சந்ததிக்கும் அளப்பரிய உயிரிழப்புக்களையும், அவய இழப்புக்களையும், சொல்லொணாத் துன்பத்தையும், வறுமையையும், பொருள் இழப்பையும், சொத்து இழப்பையும் ஏற்படுத்தி உள்ளது என்பதை நாம் உணரவேண்டும்.

பல நூற்றாண்டுகளாக மிகவும் பழமை வாய்ந்த சமூகங்களாக இலங்கைத் தீவை நாம் பகிர்ந்திருந்தோம். சிங்களவர்கள் இல்லாமல் எமக்கு எதிர்காலம் இல்லை என்ற உண்மையை நாம் மீள் ஆய்வு செய்துகொள்ள வேண்டும்.

இதேவேளை தமிழர்களையும் இஸ்லாமியர்களையும் கீழ்ப்படுத்திக்கொண்டு வாழ்வது நிரந்தரமான நம்பிக்கை இன்மை என்பதை சிங்களவர்களும் புரிந்துகொள்ள வேண்டும்.

எம்மைப் பிரிக்கின்ற காரணிகளை வைத்துக்கொண்டு போரிடாமல் மனித சமூகமாக எவ்வாறு ஒன்றாக வாழலாம் என்கிற விடயத்தில் நாம் கவனம் செலுத்தல் வேண்டும். தமிழர்களும் சிங்களவர்களும் இந்தக் கொடூரமான போரில் இறந்து போயிருக்கலாம். ஆனால் மொத்தத்தில் மானுடம்தான் அங்கே கொல்லப்பட்டது.

இந்த இருபத்தோராம் நூற்றாண்டில் எமது தலைமுறையின் எதிர்காலத்துக்கென ஊனத்தையும், சிதைவுகளையும் சொத்தாக விட்டுவிட்டு செல்லமுடியாது. தமிழர்கள் மத்தியிலும் சிங்களவர்கள் மத்தியிலும் ஓர் பண்பாட்டு வழமை உள்ளது.

அது என்னவெனில், பிணக்குகளால் பிரிந்து நிற்கும் குடும்பங்கள் பல் பெரும்பாலும் திருமணத்தில் அல்லாமல் மரணச் சடங்கிலேயே ஒன்று சேருகின்றன.

தமிழர், சிங்களவர்கள் ஆகிய இரு பாலாருமே பாரிய சாவுகளையும், முடிவில்லாத மரணச் சடங்குகளையும், கொலைகளையும், அங்கவீனங்களையும், சிதைவுகளையும் பாரிய அளவிலான தனியார் சொத்துக்களையும் தேசிய சொத்துக்களையும் இழந்து உள்ளார்கள். கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக எமது அன்புக்குரிய ஆண் பெண் குழந்தைகளையும் இழந்து, நாம் பேணிப் பாதுகாத்த எமது பண்பாட்டு, மதப் பெறுமானங்களையும் அழுக்காக்கி விட்டோம். இந்த நிலை இனிமேலும் தொடர நாம் அனுமதிக்க முடியாது.

எமது மண்ணிலே போரின் இறுதி நாட்களில் நடந்து முடிந்த பாரிய மனித அவலத்தை இந்தச் சுதந்திர உலகம் எவ்வாறு பார்த்துக் கொண்டிருந்தது என்பதை நாம் அறிவோம்.

இவர்களுடைய நல் எண்ணத்திலும், தர்மத்திலும் நாம் தங்கியிருக்க முடியாது. எவ்வளவோ விடயங்கள் முக்கியமானவை. ஆனால் அவற்றையும் விட இன்னும் எவ்வளவோ விடயங்கள் அவசியமானவை.

பண்பாட்டுரிமை, மொழியுரிமை, பிரதேச உரிமை என்பன அனைத்து இனங்களுக்கும் முக்கியமானவை. ஆனால் அவற்றிலும் பார்க்க உணவு, உடை, சுகாதாரம், இருப்பிடம் என்பன அவற்றையும் விட மிக மிக முக்கியமானவையாகவும் பின்போடப்பட முடியாதவையுமாகும். நேர்டொ (NERDO) அமைப்பு எம[illegible] எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யக்கூடிய சேவைகள் செய்யாவிடினும் அதை யாராவது ஆரம்பித்து வைக்கவேண்டும்.

> **எமது மண்ணிலே போரின் இறுதி நாட்களில் நடந்து முடிந்த பாரிய மனித அவலத்தை இந்தச் சுதந்திர உலகம் எவ்வாறு பார்த்துக் கொண்டிருந்தது என்பதை நாம் அறிவோம். இவர்களுடைய நல் எண்ணத்திலும், தர்மத்திலும் நாம் தங்கியிருக்க முடியாது**

அனாதைச் சிறார்களுக்கும், விதவைகளுக்கும் உணவளிக்கவும், அகதி முகாம்களில் சிறுவர்களுக்கு கல்வி வழங்கவும், தடுப்பு முகாம்களிலும் சிறைகளிலும் உள்ளவர்களை சென்று பார்க்கவும் நாம் வெளிநாட்டு நிறுவனங்களை எதிர்பார்க்க முடியாது.

எமது சிறார்கள் தான் முதன்மையாகப் பாதிக்கப்பட்டவர்கள். இதற்கு நாம் முதற்படி எடுத்தாக வேண்டும்.

எமது சாய்மனைக்கதிரை விமர்சனம் சிறைச்சாலைகளில் இருப்பவர்களுக்கும், முகாம்களில் இருப்பவர்களுக்கும் எந்த நன்மையையும் தரப்போவதில்லை. உண்மையான மனிதாபிமானச் சேவை செய்பவர்கள் ஊடாகத் தான் நாம் அவர்களைச் சென்றடையலாம்.

# யுத்தக்குற்றங்களுக்கு யார் பொறுப்பு; மனித உரிமை அமைப்புக்கள் போர்க்கொடி

## ஹிலாரி கிளிங்ரனுக்கு வந்து குவியும் கடிதங்கள்

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கத்தை பொறுப்புக் கூறல்களுக்கு வற்புறுத்துமாறு ஹிலாரி கிளிண்டனிடம் மனித உரிமை அமைப்புகள் பல வேண்டுகோள் விடுத்துள்ளன.

ஐநா. சபையின் மனித உரிமை ஆணைக்குழுவின் 17ஆவது அமர்வு எதிர்வரும் சில நாட்களில் ஆரம்பமாகவுள்ளது. அதன் போது இலங்கை மீதான போர்க் குற்றங்கள் தொடர்பாக ஆக்க பூர்வமான பொறுப்புக்கூறல் நடவடிக்கைகளை மேற்கொள்ள வலியுறுத்துமாறு கோரி அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ஹிலாரி கிளின்டனுக்கு மனித உரிமை அமைப்புக்கள் கடிதங்களை அனுப்பியுள்ளன.

சர்வதேச மன்னிப்புச் சபை, இன்டர்நெசனல் கிறைசிஸ் குரூப், மனித உரிமை கண்காணிப்பு நிலையம் மற்றும் சர்வதேச ராஜந்திர உறவுகளுக்கான ஜிம்மி கார்ட்டர் நிலையம், என்பன உட்பட முக்கியமான பதினொரு மனித உரிமை அமைப்புக்களே அவ்வாறு ஹிலாரிக்கு கடிதங்களை அனுப்பியுள்ளன.

நிபுணர்குழு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டே இந்தக் கடிதம் எழுதப்பட்டுள்ளதுடன் ஐநா மனித உரிமை ஆணைக் குழுவின் 17வது கூட்டத் தொடரை இவ்வியத்தில் சாதமாகப் பயன்படுத்திக் கொள்ளுமாறு அமெரிக்க இராஜாங்கச் செயலாளரிடம் பிரஸ்தாப அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.

இலங்கையில் இடம்பெற்ற சிவில் யுத்தத்தின்போது விடுதலைப் புலிகள் மற்றும் அரசாங்கப் படையினர் ஆகிய இருதரப்பாலும் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள் மற்றும் இரு தரப்பாலும் இழைக்கப்பட்டதாகக் கூறப்படும் யுத்தக் குற்றங்கள் பற்றி சர்வதேச விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் எனவும் பிரஸ்தாப அமைப்புகள் தங்கள் கடிதம் மூலம் தொடர்ந்தும் வேண்டுகோள் விடுத்துள்ளன.

# யாத்திரிகர் மடம் அமைக்கக் கோரிக்கை

(ஊர்காவற்றுறை)

நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயம், நாகவிகாரை செல்லும் பல்லின யாத்திரிகர்களின் நன்மை கருதி குறிகாட்டுவான், நயினாதீவுப் பகுதிகளில் யாத்திரிகர் தங்குமடங்களை அமைத்துத் தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் பிரசித்தி பெற்ற இந்துத் தலமான நயினை நாகபூசணி அம்மன் ஆலயம், பௌத்தத் தலமான நாகவிகாரை என்பன அமைந்துள்ளமையால் இத்தலங்களைத் தரிசிப்பதற்காக நாளாந்தம் நயினாதீவு நோக்கி நூற்றுக்கு மேற்பட்ட யாத்திரிகர்கள் வந்துசெல்கின்றனர்.

இவர்களில் பௌத்த தலமான நாகவிகாரையினைத் தரிசிப்பதற்காகத் தென் பகுதியில் இருந்து தினமும் வருகைதரும் யாத்திரிகர்கள் யாத்திரிகர் மடம் இன்மையால் பயணித்த பேருந்துகளிலேயே உறங்குவதுடன், வீதியின் அருகில் மரநிழலில் உணவு தயாரித்து உண்பதனையும் காணக்கூடியதாகவுள்ளது.

மேற்படி யாத்திரிகர்களின் நன்மையினைக் கருத்தில் கொண்டு குறிகாட்டுவான் பகுதியில் ஒரு யாத்திரிகர் விடுதியினை அமைத்துத் தினமும் வந்துசெல்லும் பக்தர்களின் குறைகளை நிவர்த்தி செய்ய உரிய நிர்வாகத்தினர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என யாத்திரிகர்கள் எதிர்பார்க்கின்றனர். (27)

# வவுண தீவில் வெடிபொருள் மீட்பு

(கொழும்பு)

மட்டக்களப்பு வவுணதீவு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கந்தன் குடா பிரதேச வீடொன்றில் இருந்து நேற்று வெடிபொருட்கள் சில மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து குறித்த வீட்டில் இருந்த சந்தேகநபர் ஒருவரை வவுணதீவுப் பொலிஸாரும் விசேட பொலிஸ் அதிரடிப் படையினரும் இணைந்து கைது செய்துள்ளனர்.

குறித்த வீட்டில் இருந்து ரீ-56 ரக ரவைகள் 41, ரீ 6 மெகஸீன் 2 மற்றும் வீதிப் பரிசோதனை உபகரணம் என்பவற்றை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் மட்டக்களப்பு நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

# சிறு போகம் அமோகம்

(கொழும்பு)

வவுனியா மாவட்டத்தில் கடந்த பெரும்போக நெற்பயிர்ச் செய்கையில் 43 ஆயிரத்து 811 ஏக்கர்களில் அறுவடை இடம்பெற்றதாக வவுனியா மாவட்ட உதவி விவசாயப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.


இதேவேளை தற்போது சிறுபோகத்தின்போது ஏப்ரல் மாதம் வரையிலுமாக 3 ஆயிரத்து 876 ஏக்கரில் நெல் பயிரிடப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, மிளகாய் 265 ஏக்கர் நிலப்பரப்பிலும், 197 ஏக்கரில் வெங்காயமும், 432 ஏக்கரில் மரக்கறிப் பயிர்ச்செய்கையும் வவுனியா மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ளன.

இத்துடன் ஆயிரத்து 258 ஏக்கரில் ஏனைய தானியங்கள் பயிரிடப்பட்டுள்ளதாகவும் உதவி விவசாயப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் மாதங்களில் பயிர்ச்செய்கையின் அளவு அதிகரிக்கும் வாய்ப்புள்ளதுடன், இவ்வாறான விவசாய நடவடிக்கைகளின் அதிகரிப்புக்கு மீள்குடியேற்றமே காரணம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# "நனோ" கார் நேற்று கொழும்பில் அறிமுகம்




இந்தியாவில் "ஒரு லட்சம் ரூபா கார்" என வர்ணிக்கப்படும் நனோ கார் நேற்று கொழும்பில் அறிமுகம் செய்துவைக்கப்பட்டது. இதன் விலை 140,000 இந்திய ரூபாவாக மதிப்பிடப்பட்டிருந்தது. இந்நிலையில் இலங்கையில் டாடா நனோவின் குறைந்த விலை மொடலானது 110 சதவீத தீர்வையுடன் சேர்த்து 925,000 இலங்கை ரூபா விலையுடையதாக இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. நனோ எல்.எக்ஸ். (Nano LX) மொடல் 11 லட்சம் இலங்கை ரூபாவாக இருக்கும் என்றும், டாடா நனோவுக்கான முதலாவது சர்வதேச சந்தையாக இலங்கை விளங்குகிறது.

# கொக்காவில் கோபுரம் விரைவில் செயற்படும்

(கொக்குவில்)

கொக்காவிலில் அமைக்கப்பட்டுள்ள தொலைத்தொடர்பு கோபுரம் வேலைகள் பூர்த்தியாகியுள்ள நிலையில் அடுத்த மாதம் வைபவரீதியாக திறக்கப்படவுள்ளது என நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

172 மீற்றர் (530 அடி) உயரம் கொண்ட இந்த கோபுரம் தொலைத்தொடர்பு ஆணைக்குழுவினரால் நிர்மாணிக்கப்பட்டது.

வடபகுதிக்கான வானொலி, தொலைக்காட்சி சேவைகளுக்கான அலைவரிசைகளும், மற்றும் சகல தொலைபேசி சேவைகளும் இந்த கோபுரத்தின் ஊடாகவே இணைக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகின்றது

கோபுரம் இயங்க ஆரம்பித்ததும் அனைத்து சேவைகளும் தடையின்றி செயல்படும் என தெரிவிக்கப்படுகின்றது

## யாழ்ப்பாணத்தில் அமைச்சர்...

9.30 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் கலந்து கொள்வதற்காக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ இன்றைய தினம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்கின்றார்.

புனர்வாழ்வளிக்கப்பட்ட 1,500 முன்னாள் புலி உறுப்பினர்களுக்கு 200,000 ரூபா வீதம் கடன் வழங்கப்படவுள்ளதுடன், வருடத்துக்கு 4 சதவீத வட்டி என்ற அடிப்படையில் இந்தக் கடன்கள் வழங்கப்படவுள்ளன. இதன்போது யுத்தத்தால் பாதிக்கப்பட்ட 60 பேருக்கு நஷ்டஈடு கொடுப்பனவுகளும் வழங்கப்படவுள்ளன.

• யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீர மைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர மற்றும் புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் சுதந்த ரணசிங்க ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர்.

இறுதிக்கட்ட யுத்தத்தின்போது கைதுசெய்யப்பட்ட மற்றும் சரணடைந்த முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்கள் கட்டம் கட்டமாக புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டு வருகின்றனர்.

இவர்களுக்குப் புனர்வாழ் வின்போது பல்வேறுபட்ட தொழில் பயிற்சிகள் வழங்கப்பட்டாலும், அதனை அவர்கள் தொடர்ந்து முன்னெடுக்கக் கூடிய வகையில் பொருளாதார வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை.

தற்போது புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலை அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டு வரும் இந்த சுயதொழில் கடன் திட்டத்தின் மூலம் முன்னாள் புலி உறுப்பினர்களின் வாழ்வாதாரம் ஓரளவு கட்டியெழுப்பப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.


## மக்கள் சேவையில்...

மேம்பாட்டிலும் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் அதிக கவனம் செலுத்திவருகின்றார். அவரும் அவரது கட்சியினதும் தொடர்ச்சியான முயற்சியின் பயனாக இன்று இந்த வீதி புனரமைக்கப்படுகின்றது. இதே போன்று மக்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கும் அவர்கள் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். அதன் பயனும் விரைவில் கிட்டும் எனவும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார், யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு மீள் குடியேறியுள்ள மக்களுக்கான சகல அடிப்படை வசதிகளையும் பெற்றுக்கொடுத்து ஒளிமயமான எதிர்காலத்தை கொடுப்பதற்காக அரசுடன் இணைந்து பணியாற்றி வருகின்றோம். அந்த வகையில் இன்று வரை மக்களுக்கு நாம் பல்வேறு வசதி வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றோம் அதற்காக நாட்டின் ஜனாதிபதி மற்றும் அமைச்சர்களான பசில் ராஜபக்ஷ, டக்ளஸ் தேவானந்தா ஆகியோருடன் ஆளுநரும் எமக்கு முழுமையான ஒத்துழைப்பினை வழங்கி வருகின்றனர். எனவே மக்களும் இந்த நல்ல சூழலை உணர்ந்து எம்முடன் கைகோர்த்து நின்றால் இந்த மாற்றத்தை மேலும் அதிகரித்துச் செல்ல முடியுமெனத் தெரிவித்தார்.

நம் தொடர்ச்சியாக மேற்கொண்டு வந்த முயற்சியின் பயனாக கிளிநொச்சி மாவட்டத்தில் 52 வீதிகள் மக்களின் இலகுவான போக்குவரத்திற்கு ஏற்ற வகையில் விரைவாக சீர்செய்யப்படவுள்ளது. அதன் ஆரம்ப நிகழ்வாக பதினைந்து கிலோ மீற்றர் நீளம் கொண்ட கிளிநொச்சி - இராமநாதபுரம் வீதி புழுதி எழாத வகையில் தார் ஊற்றி சீர்செய்யப்படுகிறது. ஏனைய வீதிகள் அனைத்திற்குமான நிரந்தர புனரமைப்புப் பணிகள் எதிர்வரும் ஒகஸ்ட் மாதத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது. அத்தோடு இம்மாவட்டத்தின் ஏனைய உட்கட்டுமான பணிகளும் நடைமுறைப் படுத்தப்பட இருக்கின்றன. எனவே மக்கள் அபிவிருத்தியின் முழுப்பயனையும் அனுபவிக்க சிறிது காலம் காத்திருக்க வேண்டும். அரசு இம்மாவட்டத்தின் ஒட்டுமொத்த அபிவிருத்திக்கு பல கோடிக் கணக்கான ரூபாக்களை ஒதுக்கியுள்ளது எனவும் சந்திரகுமார் எம்.பி. குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ் வரன், வடமாகாண உள்ளூராட்சி மன்றங்கள் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் திருமதி விஜய லட்சுமி ரமேஸ், கிளிநொச்சி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் உதயராஜு, ஈ.பி.டி.பி.யின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதன், கரைச்சி பிரதேச சபை செயளாளர், மக்கள் அமைப்பு பிரதிநிதிகள் பொது மக்களும் கலந்துகொண்டனர்



# பல்கலைக்கழக மாணவர் தெரிவு 20, 274 மாணவர்கள் தகுதி

(கொழும்பு)

2010/2011 ஆம் ஆண்டு பல்கலைக் கழகங்களுக்கு மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்கான வெட்டுப்புள்ளிகள் வெளியாகின.

இதன் அடிப்படையில் இம்முறை சகல மாவட்டங்களிலிருந்தும் 21 பல்கலைக் கழகங்களுக்கும் 20,274 மாணவர்கள் 86 பாடவிதானங்களுக்காக இணைத்துக்கொள்ள உள்ளனர். முதற் தடவையாக ரஜரட்ட பல்கலைக் கழகம் மற்றும் சப்ரகமுவ பல்கலைக் கழகத்தில் சுற்றுலாத் துறை மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவ பாடத்திட்டம் அறிமுகம் செய்துவைக்கப் படுகிறது. இதற்கென 101 மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும்.

பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்படும் மாணவர்கள் அம் மாவட்டத்திலுள்ள பாடசாலையில் 3 வருடங்கள் கட்டாயமாக கல்வி கற்றிருக்க வேண்டும். அவ்வாறில்லையேல் ஏனைய மாவட்டத்திலிருந்து வருகைதரும் போது கடைசியாக இருந்த மாவட்டத்திற்கான வெட்டுப்புள்ளியின் அடிப்படையிலேயே பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்படுவார்கள்.

அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற முதல் 10 சதவீதமானவர்கள் எந்தப் பல்கலைக் கழகத்திற்கும் சுய விருப்பத்தின் பேரில் விண்ணப்பிக்க முடியும். அத்துடன் 40 சதவீமான மாணவர்கள் தகைமைகள் மற்றும் சுய விருப்பத்தின் பேரிலும், 60 சதவீதமானவர்கள் மாவட்ட, கல்வித் தகைமை மற்றும் சுய விருப்பத்தின் பேரிலும் தெரிவு செய்யப் படவுள்ளனர்.

இம்முறை கல்விப் பொதுத்தராதரப் பத்திர உயர்தர பரீட்சைக்குத் தோற்றிய 233,609 மாணவர்களில், 142,516 மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பிக்க தகுதி பெற்றனர். இவர்களில் 54,124 மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்காக விண்ணப்பித்திருந்தனர்.

பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கு ஒருவருட ஆங்கில மற்றும் தகவல் தொழில்நுட்பப் பயிற்சிகளும் வழங்கப்படவுள்ளன.

மாணவர்களின் விண்ணப்பங்கள் ஜுலை மாதம் இறுதியில் ஏற்றுக்கொள்ளப்படும். ஓகஸ்ட் மாதம் ஆரம்பத்தில் பல்கலைக் கழகத்திற்கு சேர்த்துக் கொள்ளப் படவுள்ளதாகவும் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவர் மேலும் தெரிவித்தார்.

# இலங்கையுடன் நட்புறவு மீள் பரிசீலனை செய்யவேண்டும்

## இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கோரிக்கை



(கொழும்பு)

இலங்கையுடனான உறவை இந்தியா மறுபரிசீலனை செய்ய வேண்டும் என இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலர் தா.பாண்டியன் கூறியுள்ளார்.


திருவாரூரில் செய்தியாளர்களிடம் உரையாற்றிய அவர்,

இலங்கை தலைவரை போர்க் குற்றவாளியாக அறிவிக்க பல நாடுகளும் முன்வந்துள்ள நிலையில், இந்தியா மட்டும் இன்னும் வாய் திறக்கவில்லை.

இந்த விடயத்தில் மத்திய அரசை வலியுறுத்த தமிழக அரசும், மக்களும் ஒன்று திரள வேண்டும். இலங்கையுடனான உறவை இந்தியா மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

வெளிநாடுகளில் வாழும் தமிழர்களின் நலன்களைப் பாதுகாக்கவும், உரிமைகளை நிலைநாட்டவும், சிரமங்களைக் களையவும் ஒரு குழுவை தமிழக அரசு அமைக்க வேண்டும் என்றார்.

# புலிகளின் தளபதி பதுமனுக்கு தொடர்ந்தும் தடுப்புக்காவல்



(கொழும்பு)

புலிகளின் திருகோணமலை மாவட்ட முன்னாள் இராணுவ கட்டளைத் தளபதியாக இருந்த பதுமன் மீது திருகோணமலை மேல் நீதிமன்றத்தால் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. பதுமன் என்று அழைக்கப்பட்ட சிவசுப்பிரமணியம் வரதநாதனை தீவிரவாத விசாரணைப் பிரிவு பொலிஸாரால் நேற்று முன்தினம் திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி தபகேந்திரன் முன்னிலையில் நிறுத்தியிருந்தனர்.

புலிகளின் திருகோணமலை மாவட்டக் கட்டளைத் தளபதியாக செயற்பட்ட இவர் இராணுவ முகாம்கள் மீது தாக்குதல் நடத்தியதாகவும், படையினரை கொன்றதாகவும், குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. இவருக்கு எதிராக 1979 ஆம் ஆண்டின் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் 48 ஆவது இலக்கத்தின் விதிமுறையின் கீழ் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

இதையடுத்து புலிகளின் முன்னாள் தளபதி பதுமனை ஜுலை 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

# விரிவுரையாளர்களின் பணிப்புறக்கணிப்பு பல்கலை மாணவர்கள் வழக்கு

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழக திணைக்கள தலைவர்கள் சமர்ப்பித்த ராஜினாமா கடிதங்களை நிராகரிக்கக் கோரி பல்கலைக்கழக மாணவர்கள் மேன்முறையீட்டு நீதிமன்றில் தனித்தனியான மனு தாக்கல் செய்துள்ளனர்.

பல்கலைக்கழகங்களின் திணைக்களங்களின் தலைவர்கள் சமர்ப்பித்த ராஜினமாவை ஏற்றுக்கொள்வதற்கு எதிராக வயம்ப பல்கலைக்கழகம், றுகுணு பல்கலைக்கழகம், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் ஆகியவற்றின் உபவேந்தர்கள், பல்கலைக்கழகங்களின் செனட் சபை அங்கத்தவர்கள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, பீடங்களின் தலைவர்கள், உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க ஆகியோருக்கு உத்தரவிடுமாறு இந்த ரிட் மனுக்களில் கோரப்பட்டுள்ளது.

வயம்ப பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த அசங்க புளேகொட, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ரஷிக தேசப்பிரிய ரத்நாயக்க, றுகுணு பல்கலைக்கழகத்தின் ஏ.எச்.அமரசிங்க ஆகியோரே இம்மனுக்களை தாக்கல் செய்துள்ளனர்.

தமது பல்கலைக்கழக கல்வியாண்டுக்குரிய விரிவுரைகள் [illegible]றும் பரீட்சைகள் முடிவடையு[illegible] வரை இத்தடை உத்தரவை நீ[illegible]குமாறும் அவர்கள் கோரியுள்ளனர். பல்கலைக்கழக திணைக்களங்களின் தலைவர்கள் 16 பேர் தொழிற்சங்க நடவடிக்கையின் ஒரு பகுதியாக ராஜினாமாக் கடிதங்களை சமர்ப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அனர்த்தத்தில் சிக்கி இதுவரை 7 பேர் பலி

(கொழும்பு)

தெற்கில் தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக கேகாலை, காலி, கம்பஹா, கொழும்பு மற்றும் களுத்துறை பகுதிகளில் வெள்ளம் மற்றும் மண்சரிவுகளில் சிக்கி இதுவரை 7 பேர் உயிரிழந்துள்ளதுடன், ஒருவர் காணாமல் போயுள்ளார். மேலும் 3627 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

# போதைவஸ்து கடத்திய பௌத்த பிக்கு கைது

(கொழும்பு)

புத்த பிக்கு ஒருவர் பன்னிப்பிட்டியவில் வைத்து ஹிரோயின் போதைப் பொருள் பொதிகளுடன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இவரிடம் ஹிரோயின் பொதி செய்யப்பட்ட போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளது.

கொழும்பு நகரில் உள்ள பிரபல பாடசாலை ஒன்றில் இந்த புத்த பிக்கு ஆசிரியராக இருக்கிறார் என்றும், இவர் ஹிரோயின் போதைப்பொருள் விநியோகஸ்தராக நீண்டகாலம் இருந்துள்ளார் என்றும் பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்து[illegible]ளது.

இவருக்கு ஹிரோயின் விநியோகம் செய்யும் மொத்த விநியோகஸ்தர் ஒருவரையும் மகரகம பொலிஸார் தேடி வருகின்றனர் என பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# பொலிஸாரின் முற்றுகை; போதைப் பொருட்கள் மீட்பு

(கொழும்பு)

ஹெரோயின், கஞ்சா, மற்றும் ஏனைய போதைப் பொருட்களை விநியோகத்திற்காக வைத்திருந்த 18 இளைஞர்களை பேலியகொடை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

நேற்றுக் காலை அப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட திடீர் முற்றுகையின் போது இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். மேற்படி இளைஞர்கள் களனி, பேலியகொடை, கிரிபத்கொடை ஆகிய பகுதிகளை சேர்ந்தவர்களாவர்.

இவர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களின் பெறுமதி மதிப்படப்பட்டு வருகின்றது.

# ஆயுர்வேத மருத்துவ முகாம்; வலி. கிழக்கில் அதிக வரவேற்பு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கிழக்கு பிரதேச மக்களுக்கு ஆயுர்வேத மருத்துவ சிகிச்சையை வழங்கும் பொருட்டு நேற்று ஆயுர்வேத பாதுகாப்புச் சபையின் மருத்துவ முகாமை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) ஆரம்பித்து வைத்தார்.

யாழ். நீர்வேலி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் ஆயுர்வேத பாதுகாப்புச் சபையின் தலைவர் டொக்டர் வி.அனகதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) சிறப்புரையாற்றினார்.

அங்கு கருத்துரைகளை வலிகாமம் கிழக்கு பிரதேச செயலர் பிரதீபன், பிரதேச சபைச் செயலர் திருமதி சோமராஜ், யாழ். நீர்வேலி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் அதிபர் தர்மரட்ணம் ஆகியோர் வழங்கினர்.

தொடர்ந்து ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர்களின் நிதி ஒதுக்கீட்டில் பாடசாலை மாணவர்களுக்கான சத்துணவு திட்டத்தில் இலைக்கஞ்சி வழங்கும் நிகழ்வையும் சில்வேஸ்த்திரி அலென்ரின் (உதயன்) ஆரம்பித்து வைத்தார்.

இந் நிகழ்வில் ஈ.பி.டி.பி.யின் கோப்பாய் பிரதேச இணைப்பாளர் ஐங்கரன், பாடசாலை சமூகத்தினர் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# பொன்சேகாவுக்கு விடுதலை மடு மாதாவுக்கு நேர்த்தி



(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகாவின் மனைவி திருமதி அனோமா பொன்சோகவும் அவரது புதல்வியும், நெருங்கிய உறவினர்களும் நேற்றுக் காலை மடுக் கோவிலுக்கும் பகல் வவுனியாவிற்கும் விஜயம் செய்து பாடசாலை செல்லும் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கினார்கள்.

வவுனியா தூய ஆவியானவரின் ஆலயத்தில் நடைபெற்ற நிகழ்வில் சுமார் 75 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

ஜனநாயக இளைஞர் அணியின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இங்கு பேசிய திருமதி பொன்சேகா - எங்களுடைய அமைப்பானது சகல இனங்களுடைய ஏழை மாணவர்களுடைய கல்வி முன்னேற்றத்திற்கு உதவி செய்து வருகின்றது. கல்வி மூலமே நாட்டுக்கு நல்ல பயனாளிகளை உருவாக்கமுடியும் அந்த திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றோம் என்றார்.

திருமதி சரத் பொன்சேகா வவுனியாவிற்கு விஜயம் செய்தமை இதுவே முதல் தடவையாகும். இந்த வைபவத்தில் இந்து, கிறிஸ்தவ மதத் தலைவர்களும் கலந்து கொண்டனர்.

# நாட்டில் மீண்டும் டெங்கு

(கொழும்பு)

தென்மேற்கு பருவப்பெயர்ச்சி காலநிலை காரணமாக மீண்டும் டெங்கு நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதனிடையே இந்த வருடத்தில் இதுவரைக்கும் 6 ஆயிரத்து 77 டெங்குத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

அத்துடன், 54 பேர் டெங்கு நோய் தொற்றால் மரணித்துள்ளதாக தொற்றுநோய்த் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

மே மாதம் முதல் இன்று வரையில் 11 பேர் மரணித்துள்ளதாகவும் அந்தப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் மே மாதம் மாத்திரம் ஆயிரத்து 235 பேர் டெங்கு தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். டெங்கு தொற்றால் கொழும்பு மாவட்ட மக்களே அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மே மாத்தில் மாத்திரம் கொழும்பு மாவட்டத்தில் 406 பேர் டெங்கு தொற்றுக்குள்ளாகியுள்ளதுடன், இந்த வருடத்தின் ஆரம்பம் முதல் இன்று வரையில் ஆயிரத்து 976 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 மே 29 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.